بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 8

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

இதழ் 1-3

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்தூர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444-ஜமாதிஸ் ஸானீ 12-26, ★ ஹிஜ்ரி ஷம்ஸி-1402, சுல்ஹ் 05-19 ★ 05-19 ஜனவரி -2023


## அல்லாஹ்வின் கட்டளை

وَاذۡکُرۡ رَّبَّکَ فِیۡ نَفۡسِکَ تَضَرُّعًا وَّخِیۡفَۃً وَّدُوۡنَ الۡجَہۡرِ مِنَ الۡقَوۡلِ بِالۡغُدُوِّ وَالۡاٰصَالِ وَلَا تَکُنۡ مِّنَ الۡغٰفِلِیۡنَ ﴿۲۰۶﴾

**பொருள் :**

நீர் உம்முடைய இறைவனைப் பணிவுடனும், அச்சத்துடனும் உம்முடைய உள்ளத்தில் நினைத்துக் கொண்டிருப்பீராக. மெதுவான குரலில் காலையிலும், மாலை நேரங்களிலும் (அவ்வாறே செய்து கொண்டிருப்பீராக). மேலும் ஒருபோதும் கவனமற்றவர்களைச் சார்ந்தவராக இருக்க வேண்டாம்.

(அல் அஃராஃப்:206)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நாம் மார்க்கத்திற்காக இருக்கின்றோம் மேலும் மார்க்கத்திற்காக உயிர் வாழ்கின்றோம் எனவே மார்க்கத்தின் வழியில் நமக்கு எந்த தடையும் இருக்கக் கூடாது

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

**வெட்கம்:** ஒருமுறை நிகழ்ந்த சம்பவம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கடுமையான தலை வலி ஏற்பட்டது. அருகில் பெண்களும், பிள்ளைகளும் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது, ஹுஸூர் (அலை) அவர்களுக்கு இந்த சப்தத்தால் துன்பம் ஏற்படவில்லையா? என்று மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் கேட்டார்கள். அப்போது, ஆம்! அவர்கள் அமைதியாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள். அப்படியென்றால், பின்னர் ஹுஸூர் ஏன் கட்டளையிடுவதில்லை? என்று மவ்லவி சாஹிப் கேட்டார்கள். அதற்கு, தாங்கள் அவர்களிடம் மென்மையாக கூறிவிடுங்கள். என்னால் கூறமுடியாது என்று ஹுஸூர் (அலை) கூறினார்கள்.

**கண்டும் காணாமல் இருத்தல்:** ஒரு வேலைக்காரப் பெண் வீட்டிலிருந்து அரிசி திருடி பிடிபட்டுவிட்டார். வீட்டில் இருந்த அனைவரும் அவரை குற்றம் குறை கூறத் தொடங்கிவிட்டனர். தற்செயலாக, அந்த பக்கமாக ஹுஸூர் (அலை) அவர்கள் கடந்து சென்றார்கள். (அவர்) தேவையுடையவர். சிறிது அவருக்கு கொடுத்துவிடுங்கள். மேலும், அவரை அவமானப்படுத்தாதீர்கள். இறைவனின் திரையிடுதல் எனும் பண்பை மேற்கொள்ளுங்கள் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்.

**நேரத்தின் மதிப்பு:** வீணானவற்றில் நேரத்தை வீணடிப்பதை ஹுஸூர் (அலை) அவர்கள் விரும்பியதில்லை. அது குறித்து கூறினார்கள்: இவ்வளவு நேரம் வீணாகிவிடுகின்றதே. இந்த நேரத்தையும் நான் ஏதாவது மார்க்கப் பணிகளில் செலவிட வேண்டுமே என்று மலம், ஜலம் கழிக்கும் நேரத்தில் எனக்கு வேதனை ஏற்படுகின்றது. இதுவே எனது நிலையாகும். கூறினார்கள்:

ஏதாவது ஒரு அவசியமான மார்க்கப் பணி வந்துவிட்டால், அந்தப் பணி முடியும் வரை நான் என் மீது உண்பதையும், பருகுவதையும், உறங்குவதையும் ஹராமாக்கிக் கொள்கினறேன். நாம் மார்க்கத்திற்காக இருக்கின்றோம். மேலும் மார்க்கத்திற்காக உயிர் வாழ்கின்றோம். எனவே மார்க்கத்தின் வழியில் நமக்கு எந்த தடையும் இருக்கக் கூடாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 419-காதியான் பதிப்பு 2018)

## நன்மை செய்யக்கூடியவரின் உள்ளத்தில் நன்மைகளுக்கான ஒளி அதிகரித்துவிடுகின்றது எந்த அளவுக்கு என்றால் அவரது முழு உள்ளமும் ஒளிமயமாகிவிடுகிறது மேலும் அவர் இரட்சிப்பு பெற்றுவிடுகிறார்

وَکُلَّ اِنۡسَانٍ اَلۡزَمۡنٰہُ طٰٓئِرَہٗ فِیۡ عُنُقِہٖ ؕ وَنُخۡرِجُ لَہٗ یَوۡمَ الۡقِیٰمَۃِ کِتٰبًا یَّلۡقٰىہُ مَنۡشُوۡرًا ﴿۱۴﴾

பொருள்: நாம் ஒவ்வொரு மனிதரின் கழுத்திலும் செயலைப் பிணைத்துள்ளோம். மறுமை நாளில் நாம் அவரு(டைய செயல்களு)க்குரிய ஒரு நூலை வெளிப்படுத்தி அவர் முன் வைத்து விடுவோம். அவர் அதனை (முற்றிலும்) திறந்திருக்கக் காண்பார். (பனீ இஸ்ரயீல்:14)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்:

ஹதீஸில் வருகிறது: ஒவ்வொரு செயலின் தாக்கமும் மனிதனின் உள்ளத்தின் மீது ஏற்படுகின்றது. நன்மை செய்தால் அவரது உள்ளத்தின் மீது ஒளியின் ஓர் அடையாளம் உருவாகிவிடுகின்றது. தீமை செய்தால் ஒரு கருமையான அடையாளம் ஏற்பட்டுவிடுகின்றது. இதேபோன்று நன்மை செய்யக்கூடியவரின் உள்ளத்தில் நன்மைகளின் ஒளி அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. எந்த அளவிற்கு என்றால் அவரது முழு உள்ளமும் ஒளிமயமாகிவிடுகின்றது. மேலும் அவர் இரட்சிப்பு பெற்றுவிடுகின்றார். மேலும் தீமை செய்யக்கூடியவரின் உள்ளத்தில் கருமையான கறை படிந்து கொண்டே செல்கிறது. எந்த அளவுக்கு என்றால், ஒருநாள் முழு உள்ளமும் கருமையாகிவிடுகிறது. மேலும் அந்த நபர் அழிந்து விடுகின்றார்.

சில மக்கள் தாயிரா என்ற சொல்லிற்கு விதி என்று பொருள் கொடுத்துள்ளனர். ஆனால், அதற்கு இந்தப் பொருள் இருக்க முடியாது. ஏனெனில் தாயிரா என்று கூறி இந்தக் கருத்து கூறப்பட்டுள்ளது. அதாவது, தனது செயலை உருவாக்கக் கூடியவன் மனிதனே ஆவான். இறைவன் நிர்ணயித்துவிட்டது என்பது ஒன்று கல் என்று கூறப்படும் அல்லது சங்கிலி என்றழைக்கப்படும்.

இதற்கு இந்தப் பொருளும் இருக்க முடியும். அதாவது, ஒவ்வொரு மனிதனின் நற்பேறும், துர்பாக்கியமும் அவனது கழுத்தில் பிணைக்கப்பட்டுள்ளது. ஆனால், அவன் மற்ற விஷயங்களில் சென்று அதிர்ஷ்டத்தை தேடிக் கொண்டிருக்கின்றான். மனிதன் நன்மை செய்யும்போது தலையை நிமிர்த்திக் கொள்கின்றான். மேலும் தீமை செய்யும்போது இழிவின் காரணமாக தலையை தாழ்த்திக் கொள்கிறான். எனவே, மனிதன் தனது செயல்களை தனது கழுத்தைக் கொண்டு ஆய்வு செய்ய வேண்டும் என்பதற்காக இந்த சொல்லை பயன்படுத்தியதன் மூலம் கவனமூட்டப்பட்டுள்ளது. அதாவது, அவன் தனது தோழர்கள் மற்றும் தம்முடன் அமர்பவர்களிடம் கழுத்தை உயர்த்த முடியுமா? இல்லையா? என்று பார்க்க வேண்டும். அவரது உள்ளமும் அவரது தோழர்களும் அவரை குறைகளற்றவராக கண்டால் அவர் நன்மையின் வழியில் செல்கின்றார் என்று புரிந்து கொள்ளட்டும். ஆனால், ஒருவேளை அவரது உள்ளமும், அவரது தோழர்களும் அவரிடத்தில் நூற்றுக்கணக்கான அசுத்தத்தை காண்கின்றனர் என்றால் அவர் மக்களுக்கு மத்தியில் பெருமையடிப்பதால் அவருக்கு என்ன பயன் கிடைக்க முடியும்?

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4, பக்கம் - 312, காதியான் பதிப்பு 2010)

## நபிமொழி

**மூன்று நபர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் எச்சரிக்கை**

(2358) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் கியாமத் நாளன்று மூன்று நபர்களை (கருணை பார்வையுடன்) பார்க்கவும் மாட்டான். அவர்களை தூய்மைபடுத்தவும் மாட்டான். மேலும் அவர்களுக்கு வேதனையளிக்கக்கூடிய தண்டனையும் வழங்குவான். அதில் ஒருவர் யாரென்றால், பயணத்தில் தேவைக்கு அதிகமாக தண்ணீர் தம்மிடம் இருந்து, (சக) பயணிக்கு தண்ணீர் கொடுக்காதவர். மற்றொருவர், இமாமிடம் உலகத்திற்காக பைஅத் செய்தவர், அந்த இமாம் அவருக்கு உலகியல் செல்வம் கொடுத்தால் திருப்தி அடைந்துவிடுவார். கொடுக்கவில்லையென்றால் அதிருப்தி கொள்வார். அடுத்த நபர், அஸர் நேரத்திற்கு பிறகு தனது வியாபாரப் பொருட்களை கடைவீதியில் வைத்துவிட்டு, எந்த இணையும் இல்லாத அந்த இறைவன் மீது ஆணையாக! எனக்கு இந்த பொருட்கள் இன்ன இன்ன விலையில் கிடைத்தன எனக் கூறுபவர், அதனை ஒருவரை உண்மையென கருதி அதனை வாங்கச் செய்தவர்.

அதன் பிறகு, எவர்கள் தங்களது உடன்படிக்கை மற்றும் சத்தியங்களை அற்ப விலைக்கு விற்று விடுகிறார்களோ என்ற வசனத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஓதினார்கள்.

(புகாரி தொகுதி 4, பாடம்-அல் முஸாகா, காதியான் பதிப்பு 2008)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவ மிக்க அந்தஸ்து கொண்ட கலீஃபா ராஷித் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களைக் குறித்த ஈமானை வலுவூட்டும் நற்குறிப்புகள்**

**எனக்கு பிறகு அபூபக்ரை நியமனம் செய்துவிட நான் விரும்பியிருந்தேன். ஆனால், அல்லாஹ்வும், நம்பிக்கையாளர்களும் அவரைத் தவிர வேறு எவர் மீதும் திருப்தி கொள்ள மாட்டார்கள் என்பதை நான் அறிவேன்**

**அன்னார் (ரலி) நபித்துவத்தின் ஓர் அழகிய பிரதியாக இருந்தார்கள். அன்னார் ஆண்மகன்களின் இமாமாக இருந்தார்கள்**

**உங்களால் கிலாஃபத்தை அழிக்கவும் முடியாது. அபூபக்ர் (ரலி) அவர்களை கிலாஃபத்திலிருந்து இழப்பிற்குரியவராகவும் ஆக்க முடியாது. ஏனெனில் கிலாஃபத் ஓர் ஒளியாகும். மேலும் அது அல்லாஹ்வின் ஒளி வெளிப்படுவதற்கான ஒரு வழிமுறையாகும்**

**மதிப்பிற்குரிய முஹம்மது தாவூத் ஸஃபர் சாஹிப் யூ.கே மற்றும் இரண்டு மர்ஹூம்களைப் பற்றிய நற்குறிப்புகளும், ஜனாஸா தொழுகையும்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள பள்ளிவாசலில் 18 நவம்பர் 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு நுபுவ்வத் மாதம் **18ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வரலாறு மற்றும் வாழ்க்கையிலிருந்து சம்பவங்கள் எடுத்துரைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களுக்கு இருந்த அந்தஸ்து குறித்து முன்னரும் எடுத்துரைக்கப்பட்டு விட்டது. மேலும் அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அன்னாரை தமது பிரதிநிதியாக நியமிக்க விரும்பியிருந்தார்கள். இன்னும் கூறப்போனால், தமக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களையே கலீஃபாவாகவும், பிரதிநிதியாகவும் அல்லாஹ் ஆக்குவான் என்றும் அன்னார் (ஸல்) அவர்கள் சைகை செய்திருந்தார்கள் என்பதும் அதிலிருந்து தெரிய வருகிறது.

ஆக, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஒரு கடிதத்தை எழுதுவதற்காக அபூபக்ர் மற்றும் உமது சகோதரரை என்னிடத்தில் அழைத்து வாருங்கள். ஆசை கொள்ளும் ஒருவர் ஆசை கொள்வார் அல்லது நான் அதிக தகுதி படைத்தவன் என்று கூறக்கூடிய ஒருவர் கூறிவிடுவாரோ என்ற அச்சம் எனக்கு உள்ளது. ஆயினும் அல்லாஹ் மற்றும் நம்பிக்கையாளர்கள் அபூபக்ரை தவிர மற்றவர்களை மறுத்துவிடுவார்கள் என தான் நோய்வாய்பட்ட தருணத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னிடம் கூறினார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம், பாடம்- ஃபளாயிலுஸ் ஸஹாபா, ஹதீஸ் எண்: 6181)

அதாவது ஒருவர் அவ்வாறு கூறினால் நிராகரிக்கப்படும். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களே பிரதிநிதியாக ஆக்கப்படுவார்கள்.

அடுத்து, ஹஸ்ரத் ஹுதைஃபா பின் யமான் (ரலி) அவர்களுடைய ஓர் அறிவிப்பும் உள்ளது. அன்னார் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நான் உங்களுக்கு மத்தியில் எப்போது வரை இருப்பேன் என்பதை நான் அறியேன். எனவே நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள். மேலும் எனக்குப் பிறகு இருப்பவர்களையும் பின்பற்றுங்கள்.

அன்னார் அபூபக்ர் மற்றும் உமரைக் குறித்து சைகை செய்திருந்தார்கள்.

(சுனன் இப்னு மாஜா, ஹதீஸ் எண் 97)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறிவந்தார்கள்.

நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து இதனை செவியுற்றேன். அன்னார் (ஸல்) கூறிவந்தார்கள்: ஒரு முறை நான் உறங்கிக் கொண்டிருந்தேன். ஒரு கிணற்றுக்கு அருகில் நான் என்னைக் கண்டேன். அந்தக் கிணற்றில் ஒரு வாளி இருந்தது. நான் அந்தக் கிணற்றிலிருந்து அல்லாஹ் நாடிய அளவில் தண்ணீர் இரைத்தேன். பின்னர் இப்னு அபீ கஹ்ஃபா அந்த வாளியைப் பெற்றுக் கொண்டார். மேலும் அவர் அதிலிருந்து ஒரு வாளித் தண்ணீரையோ அல்லது இரு வாளித் தண்ணீரையோ இரைத்து வெளியேற்றினார். அவர் இரைத்ததில் சிறிது பலவீனம் இருந்தது. மேலும், அல்லாஹ் அவரது பலவீனத்தின் மீது திரையிட்டவாறு அவரை மன்னித்துவிடுவான். பின்னர் அந்த வாளி விரிவடைந்துவிட்டது. அதாவது, அது தோலாலான ஒரு பெரிய வாளியாக ஆகிவிட்டது. மேலும் இப்னு கத்தாப் அந்த வாளியைப் பெற்றுக் கொண்டார். உமர் அழுத்தத்துடன் தண்ணீரை இரைத்ததைப் போன்று மக்களில் வேறு எவரையும் இரைத்ததை நான் கண்டதில்லை. அவர் எந்த அளவிற்கு தண்ணீர் இரைத்தார் என்றால் மக்கள் அதனால் நன்கு தாகத்தை தணித்துக் கொண்டு தத்தமது இருப்பிடங்களில் சென்று அமர்ந்து கொண்டார்கள். (ஸஹீஹ் புகாரி, பாடம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஸஹாபிகளின் சிறப்புகள், ஹதீஸ் எண்: 3664)

அதாவது, தமக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோர் பிரதிநிதியாக ஆகுவார்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

உஃப்க் சம்பவத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நடந்து கொண்ட விதம் மற்றும் அன்னாரின் சிறப்புகள் ஆகியவற்றின் விளக்கம் ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டுவிட்டது. இங்கு ஒரு சுருக்கமான பகுதியை மட்டும் நான் எடுத்துரைக்கின்றேன். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது மலை இடிந்து விழுந்தது போன்ற பழிசுமத்தப்பட்டிருந்தது. ஆனால், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் பெற்றோர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீதான நேசம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீதான கண்ணியம் ஆகியவற்றில் தமது மகளின் மீதான அன்பை விட பல மடங்கு முன்னேறியிருந்தார்கள் என்பது இதிலிருந்து தெளிவாக வெளிப்படுகின்றது. அந்த பெற்றோர்கள் அந்த முழு காலத்திலும், எந்த நிலையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தங்களது மகளை வைத்திருந்தார்களோ அதே நிலையிலேயே அவர்களும் வைத்திருந்தார்கள். மேலும்

அவ்வாறு வைத்திருப்பதையே உகந்ததாக கருதினார்கள். எந்த அளவிற்கு என்றால், ஒரு முறை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தமது பெற்றோரின் வீட்டிற்கு வருகை தந்தபோது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரை அப்போதே அன்னாரது வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். எனவே புகாரியில் அறிவிப்பு வருகிறது. உஃப்க் சம்பவத்தின்போது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அனுமதியுடன் ஓர் ஊழியருடன் தமது பெற்றோரின் வீட்டிற்கு சென்றார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் வீட்டில் நுழைந்தேன். அப்போது நான் எனது தாயாரான உம்மே ரூமான் அவர்களை வீட்டின் கீழ் தளத்திலும்,எனது தந்தையார் அபூபக்ர் (ரலி) அவர்களை வீட்டின் மேல் தளத்திலும் கண்டேன். அன்னார் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தார்கள். எனது அன்பிற்குரிய மகளே! எப்படி வந்தாய்? என்று எனது தாயார் கேட்டார்கள். நான் அன்னாரிடம் கூறினேன். மேலும், அந்த சம்பவங்களை அன்னாரிடம் எடுத்துரைத்தேன்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அதனைக் கேட்டுவிட்டு எனக்கு எந்த அளவிற்கு ஆச்சரியம் ஏற்பட்டதோ அந்த அளவிற்கு அன்னாருக்கு ஆச்சரியம் ஏற்படவில்லை என்பதை நான் கண்டேன். சம்பவத்தைக் கேட்டுவிட்டு அன்னார் மிகவும் துன்பத்திற்கு ஆளாவார்கள் என்று நான் எண்ணியிருந்தேன். ஆனால் அன்னாருக்கு எந்த ஆச்சரியமும் ஏற்படவில்லை.

எனது அன்பிற்குரிய மகளே! உனக்கு எதிராக நிகழக்கூடிய இந்த விஷயத்தை நீ சாதாரண விஷயமாகக் கருதிக் கொள். ஏனென்றால் அல்லாஹ்வின் மீது ஆணையாக! அதாவது ஒருவருக்கு ஓர் அழகிய மனைவி இருந்து அவர் மீது அவர் அன்பும் கொள்ளும்போது, மேலும் அவருக்கு சகக்கிழத்திகள் இருக்கும்போது, அவர்கள் பொறாமை கொள்வர். மேலும், அவரைக் குறித்து இட்டுக் கட்டுக்கட்டப்படுவது நிகழ்கின்றது என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் தாயார் கூறத் தொடங்கினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அப்போது அந்த சம்பவத்தின் காரணமாக என் மீது ஏற்பட்ட தாக்கம் (எனது தாயாராகிய) அன்னார் மீது ஏற்படவில்லை என்பதை நான் கண்டேன். எனது தந்தையும் இதனை அறிந்துள்ளார்களா? என்று நான் கேட்டேன். அதற்கு, ஆம்! என்று அன்னார் கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். அதாவது தனது தாயாரிடம் (இது குறித்து) ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் (அறிவார்களா)? என்று அன்னார் கேட்டார்கள். ஆம்!, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் அறிவார்கள் என்று அன்னார் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அதனால் எனது கண்ணீர் வழிந்தோடத் தொடங்கிவிட்டது. மேலும் நான் அழத் தொடங்கிவிட்டேன்.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது மகளின் குரலை செவிமடுத்தார்கள். வீட்டின் மேல்தளத்தில் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருந்த அன்னார் கீழே இறங்கி வந்தார்கள். மேலும் இவளுக்கு என்ன ஆகிவிட்டது? என்று எனது தாயாரிடம் கேட்டார்கள். அவளைக் குறித்து பேசப்பட்டு வரும் விஷயங்கள் அவளை சென்றடைந்துள்ளன என்று அன்னார் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தோடியது. கூறினார்கள்: எனது அன்பிற்குரிய மகளே! நான் உன்னிடம் ஆணையிட்டுக் கூறுகின்றேன். நீ உனது வீட்டிற்கு திரும்பி சென்று விடு. (அப்போது) நான் திரும்பிவந்துவிட்டேன் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். (ஸஹீஹ் புகாரி, கிதாபுத் தஃப்ஸீருல் குர்ஆன், தஃப்ஸீர் சூரத்துன் நூர், அறிவிப்பு எண்: 4757)

உஃப்க் சம்பவத்தை குறிப்பிடும்போது, அந்த தீய சதித்திட்டம் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அந்தஸ்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

யார்? யாரை இழிவுபடுத்துவது நயவஞ்சகர்கள் அல்லது அவர்களின் தலைவர்களுக்கு பயனளிக்கக் கூடியதாக இருந்தது? என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மேலும் இதன் மூலமாக எந்த எந்த மக்கள் மீது நயவஞ்சகர் தனது பகைமையை தீர்த்துக் கொள்ள முடிந்தது? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஹுஸூர் (ரலி) கூறுகின்றார்கள்: மிகவும் சாதாரணமாக சிந்தித்துப் பார்த்தால் கூட இந்த விஷயம் தெரிந்துவிடும். அதாவது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது பழிசுமத்தி இரண்டு நபர்கள் மீதான பகைமையை தீர்த்துக் கொள்ள முடிந்திருந்தது. ஒன்று, இறைத் தூதர் (ஸல்) அவர்கள், மற்றொருவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்.

ஏனெனில், அன்னார் ஒருவரின் மனைவியாக இருந்தார்கள். மற்றொருவரின் மகளாக இருந்தார்கள். மேலும் அந்த இரண்டு நபர்களும் எப்படிபட்ட நபர்களாக இருந்தார்கள் என்றால் அவர்களை இழிவுபடுத்துவதன் மூலம் அரசியல் அல்லது பொருளாதாரத்தின் அடிப்படையில் அல்லது பகைமையின் அடிப்படையில் சில மக்களுக்கு பயனளிக்கக்கூடியதாக இருந்தது அல்லது சில மக்களின் நோக்கங்கள் அவர்களை இழிவுபடுத்துவதுடன் தொடர்பு கொண்டதாக இருந்தன. அவ்வாறில்லையென்றால், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை இழிவுபடுத்துவதில் வேறு எவருக்கும் எந்த ஆர்வமும் இருந்திருக்க முடியாது. அதிகபட்சமாக அன்னார் (ரலி) அவர்களின் சகக்கிழத்திகளுக்கு தொடர்பு இருந்திருக்கக் கூடும். அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஏனைய மனைவிமார்கள் ஆவர். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் சகக்கிழத்திகள் ஒருவேளை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பார்வையிலிருந்து தாழ்த்துவதற்காகவும், தமது நற்பெயருக்காகவும் அந்த விவகாரத்தில் ஏதாவது பங்கு வகித்திருக்கக் கூடும் என்ற எண்ணம் எவருக்காவது இருக்கலாம். ஆனால், அதாவது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் சகக்கிழத்திகள் இந்த விவகாரத்தில் எந்தப் பங்கும் வகிக்கவில்லை என்பதற்கு வரலாறு சாட்சியாக உள்ளது. இன்னும் கூறப்போனால், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் சொந்தக் கூற்றே உள்ளது. அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்களில் எனக்குப் போட்டியாக நான் கருதி வந்தவர் ஹஸ்ரத் ஸைய்னப் (ரலி) அவர்கள் ஆவார். அன்னாரைத் தவிர, வேறு எந்த மனைவியையும் நான் எனது போட்டியாக கருதியதில்லை. ஆனால், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் ஸைய்னப் (ரலி) அவர்களின் கருணையை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. அதாவது, என் மீது பழி சுமத்தப்பட்டபோது, அந்த பழியை மிக அதிகமாக மறுதலித்த ஒரு பெண்மணி இருந்தார் என்றால் அது ஹஸ்ரத் ஸைய்னப் (ரலி) அவர்களே ஆவார்கள்.

எனவே, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது ஒருவருக்கு பகைமை இருந்திருக்குமென்றால், அது அன்னாரின் சகக்கிழத்திகளில் ஒருவருக்கே இருந்திருக்கக் கூடும். ஒருவேளை அவர்களில் எவராவது விரும்பியிருந்தால் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பார்வையிலிருந்து வீழ்த்துவதற்காகவும், தமது கண்ணியத்தை அதிகப்படுத்திக் கொள்வதற்காகவும் பங்குபெற்றிருக்க முடியும். ஆனால், அவர்கள் அதாவது மற்ற மனைவிமார்கள் அந்த விவகாரத்தில் எந்த பங்கும் வகிக்கவில்லை என்று வரலாற்றிலிருந்து நிரூபணம் ஆகியுள்ளது. ஒருவரிடத்தில் கேட்டபோது அவர் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை புகழ்ந்தே பேசியுள்ளார். மேலும், மற்றுமொரு மனைவி தொடர்பாக குறிப்பு வருகின்றது. அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரிடம் அந்த விவகாரத்தைக் குறிப்பிட்டபோது, நான் ஆயிஷா (ரலி) அவர்களிடம் நன்மையைத் தவிர்த்து வேறு எதனையும் கண்டதில்லை என்றே அவர் கூறினார். ஆக, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் எவராவது தமது பகைமையை காட்டுவதற்கு வாய்ப்பு இருந்தது என்றால் அது அன்னாருடைய சகக்கிழத்திகள் சார்பாகவே வெளிப்பட வாய்ப்பு இருந்தது. ஆனால், இந்த விவகாரத்தில் அவர்களின் எந்த தொடர்பும் நிரூபணமாகவில்லை.

அதேபோன்று பெண்கள் மீது ஆண்கள் பகைமை கொள்வதற்கும் எந்த காரணமும் இல்லை. எனவே ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது, ஒன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீதான காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பழி சுமத்தப்பட்டது அல்லது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீதான காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பழி சுமத்தப்பட்டது. இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு கிடைத்திருந்த அந்தஸ்தை பழிசுமத்துபவர்களால் பறிக்க முடியாமல் இருந்தது. அவர்களுக்கு எந்த விஷயத்தில் அபாயம் இருந்ததென்றால், இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு பிறகு அன்னார் தமது நோக்கங்களை முழுமை செய்வதலிருந்து இழப்பிற்குரியவராக இருக்க வேண்டும் என்பதே ஆகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பிறகு கலீஃபா ஆகுவதற்கு ஒரு நபர் தகுதி படைத்தவராக இருக்கின்றார் என்றால் அவர் அபூபக்ரே ஆவார் என்பதை அவர்கள் பார்த்துக்

கொண்டிருந்தனர்.

எனவே இந்த அபாயத்தை அவர்கள் கணித்தவாறு, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பார்வையிலிருந்து தாழ்ந்துவிட வேண்டும் மேலும், அன்னார் தாழ்ந்துவிடுவதன் மூலம் முஸ்லிம்களுக்கு மத்தியில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு கிடைத்துள்ள செல்வாக்கு குறைந்துவிட வேண்டும் மேலும், முஸ்லிம்கள் தப்பெண்ணம் கொண்டு அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீது தப்பெண்ணம் கொண்டு அன்னார் (ரலி) மீது அவர்கள் கொண்டிருந்த பற்றை கைவிட்டுவிட வேண்டும். மேலும், இவ்வாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பிறகு கலீஃபா ஆகுவதற்கான வாசல் அடைபட்டு விட வேண்டும் என்பதற்காகவே அந்த பழிசுமத்தியவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது பழிசுமத்தினர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இவ்வாறே ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலத்தில் பைகாமிகள் எனும் கூட்டத்தினர் என் மீது ஆட்சேபனைகளை சுமத்தி வந்தனர். மேலும் என்னை இழிவுபடுத்த முயற்சி செய்து வந்தனர்.

ஆக, இதன் காரணமாகவே இறைவன், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் மீது பழிசுமத்தப்பட்ட அந்த சம்பவத்திற்கு பிறகு கிலாஃபத்தையும் குறிப்பிட்டுள்ளான்.

ஹதீஸில் மிக தெளிவாக வருகின்றது. அதாவது ஸஹாபிகள் தங்களுக்குள் பேசி வந்தனர். அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பிறகு ஒருவருக்கு அந்தஸ்து உள்ளது என்றால் அது அபூபக்ர் (ரலி) அவர்களுக்கான அந்தஸ்தே ஆகும் என்று அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தனர்.

அடுத்து ஹதீஸில் வருகின்றது. அதாவது, ஒருமுறை இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் ஒரு நபர் வந்தார். இறைத் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எனது இன்ன விருப்பத்தை நிறைவேற்றுங்கள் என்று அவர் கூறினார். அதற்கு, இப்போது இயலாது பிறகு வரவும்! என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர் காட்டரபியாக இருந்தார். அவர் நாகரீகம் மற்றும் மரியாதைகளை அறியாதவராக இருந்தார். எனவே, தாங்களும் இறுதியில் மனிதர் ஆவீர்கள். நான் பின்னர் வரும்போது, தாங்கள் அந்தநேரத்தில் மரணித்துவிட்டிருந்தீர்கள் என்றால் நான் என்ன செய்வது? என்று அவர் வெளிப்படையாக கூறிவிட்டார்.

அதற்கு, நான் உலகத்தில் இல்லையென்றால், அபூபக்ர் (ரலி) அவர்களிடம் செல்லவும். அவர் உமது விருப்பத்தை நிறைவேற்றிக் கொடுப்பார் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதேபோன்று, ஹதீஸில் வருகின்றது. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஒருமுறை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்:

ஆயிஷாவே! எனக்கு பிறகு அபூபக்ரை நான் நியமித்துவிட விரும்பினேன். ஆனால், அல்லாஹ்வும், நம்பிக்கையாளர்களும் அவரைத் தவிர வேறு எவர் மீதும் திருப்திக் கொள்ள மாட்டார்கள் என்பதை நான் அறிவேன். எனவே நான் ஒன்றும் கூறவில்லை.

சுருக்கமாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பிறகு தங்களில் ஒருவருக்கு அந்தஸ்து உள்ளது என்றால் அது அபூபக்ருடைய அந்தஸ்தே ஆகும். இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு பிறகு அபூபக்ர் அவர்களுக்கே கலீஃபா ஆகக் கூடிய தகுதி உள்ளது என்பதை ஸஹாபிகள் இயற்கையாகவே புரிந்திருந்தனர்.

மக்கத்து வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருந்ததென்றால், அதில் அரசாங்கம் மற்றும் நிர்வாகத்திற்கான கேள்வியே எழுந்திருக்கவில்லை. ஆனால் மதீனாவிற்கு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் வருகை தந்துவிட்ட பிறகு அரசாங்கம் நிலைபெற்றுவிட்டது. எனவே இயல்பாகவே நயவஞ்சகர்களின் உள்ளங்களில் இந்த கேள்வி எழத் தொடங்கியது. ஏனெனில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்ததன் காரணமாக, அவர்களின் பல எதிர்பார்ப்புகள் பொய்யாகிவிட்டன. தனது அரசாட்சிக்கான அனைத்து வாய்ப்புகளும் கைநழுவி சென்றுவிட்டன என்பதை அப்துல்லாஹ் பின் அபீ சுலூல் பார்த்தபோது அவனுக்கு கடுமையான கோபம் வந்தது. அவன் வெளிப்படையில் முஸ்லிம்களுடன் இணைந்திருந்தான் என்றபோதிலும், அவன் எப்போதும் இஸ்லாத்தில் பிரிவினையை ஏற்படுத்திக் கொண்டு வந்தான். தற்போது அவனால் வேறு எதுவும் செய்ய முடியாமல் இருந்தது. எனவே அவனது உள்ளத்தில் ஏதாவது ஆசை இருந்திருக்க முடியும் என்றால் அது இதுவாக இருந்தது. அதாவது, முஹம்மது (ஸல்) அவர்கள் மரணித்த பிறகு நான் மதீனாவின் அரசனாகி விட வேண்டும் என்பதே அவனது ஆசையாக இருந்தது. ஆனால், முஸ்லிம்களுக்கு மத்தியில் அரசாட்சி நிலைபெற்ற உடன் மேலும் ஒரு புதிய அமைப்பை அவர்கள் கண்ட உடன் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டன. அதாவது இஸ்லாமிய அரசாங்கத்தின் வழிமுறை என்ன? தங்களுக்கு பிறகு நிலைமை என்னவாக இருக்கும்? அது குறித்து முஸ்லிம்கள் என்ன செய்ய வேண்டும்? என்றெல்லாம் கேட்கப்பட்டன.

அப்துல்லாஹ் பின் அபீ சுலூல் இந்த நிலைமையைக் கண்டபோது அவனுக்கு அச்சம் ஏற்படத் தொடங்கியது. அதாவது இனி இஸ்லாமிய அரசாங்கம் எப்படிப்பட்ட வடிவில் நிலைபெறும் என்றால் அதில் எனது பங்கு எதுவும் இருக்காது என்று அவன் அஞ்சினான். அதாவது அப்துல்லாஹ்வின் எந்த பங்கும் இருக்காது. எனவே அவன் அந்த நிலைமைகளை அவன் தடுக்க விரும்பினான். எனவே அவன் சிந்தித்து பார்த்தபோது அவனுக்கு இந்த விஷயம் தென்பட்டது. அதாவது, இஸ்லாமிய அரசாங்கத்தை இஸ்லாமிய சட்டத்திட்டங்களின் கீழ் ஒருவரால் நிலைநாட்ட முடியும் என்றால் அது அபூபக்ர் (ரலி) அவர்களால் மட்டுமே முடியும் என்பதையும் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு பிறகு முஸ்லிம்களின் பார்வை அவர் பக்கமே அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பக்கமே எழும் என்பதையும் அவன் கண்டு கொண்டான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முஸ்லிம்களுக்கு மத்தியில் மற்ற அனைவரையும் விட மிகவும் கண்ணியத்திற்குரியவராக கருதப்பட்டார்கள். எனவே அன்னாரை இழிவுபடுத்தி மக்களின் பார்வையிலிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை தாழ்த்த வேண்டும். இன்னும் கூறப்போனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பார்வையிலிருந்தும் தாழ்த்தி விட வேண்டும். அதில் தான் தனக்கு நன்மை உள்ளது என்பதை அப்துல்லாஹ் பின் அபீ சுலூல் கண்டு கொண்டான்.

எனவே, இந்த தீய எண்ணத்தை முழுமை செய்வதற்கான வாய்ப்பு, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஒரு போரிலிருந்து திரும்பும்போது பின் தங்கிவிட்ட சம்பவத்தின் மூலம் அவனுக்கு கிடைத்துவிட்டது. அந்த கயவன் அன்னார் (ரலி) மீது அசுத்தமான பழியை சுமத்தினான். அது திருக்குர்ஆனில் சைகையாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் ஹதீஸ்களில் அதன் விளக்கம் வந்துள்ளது.

அப்துல்லாஹ் பின் அபீ சுலூலிற்கு அதில் இந்த நோக்கம் இருந்தது. அதாவது, அதன் மூலம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்களின் பார்வையில் இருந்து இழிவடைந்து விடுவார்கள். மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடனான அன்னாரின் தொடர்புகளும் சீர்கெட்டு விடும். மேலும் அந்த (கிலாஃபத்) அமைப்பை நிலை நாட்டுவதிலும் சிக்கல் உருவாகிவிடும் என்பது அவனது எண்ணமாக இருந்தது. எந்த அமைப்பு நிலை பெறுவது உறுதியானதாக தென்பட்டுக் கொண்டு இருந்ததோ அது உருவாகுவதில் இதன் மூலம் சிக்கல் உருவாகிவிடும் என்பது அவனது எண்ணமாக இருந்தது. அந்த அமைப்பு நிலைபெற்று விடுவதால் அவனது நம்பிக்கைகள் தகர்ந்து போகக் கூடியதாக இருந்தன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பிறகு அரசாட்சிக்கான கனவு அப்துல்லாஹ் பின் அபீ சுலூலிற்கு மட்டுமே இருக்கவில்லை. மாறாக, அந்த நோய்க்கு வேறு சில மக்களும் ஆளாகியிருந்தனர். எப்போதும் நயவஞ்சகன் பொதுவாக தனது மரணத்தை தொலைவில் இருப்பதாகவே கருதுவான். மேலும், பிறரின் மரணம் தொடர்பாக ஆருடம் செய்து கொண்டிருப்பான். எனவே அப்துல்லாஹ் பின் அபீ சுலூலும் தனது மரணத்தை தொலைவில் இருப்பதாகவே கருதிக் கொண்டிருந்தான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்நாளிலேயே தனது கால்கள் தேய்ந்து, தேய்ந்து மாண்டு போய்விடுவான் என்பதை அவன் அறிந்திருக்கவில்லை. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணித்த பிறகு நான் அரேபியாவின் அரசனாகிவிடுவேன் என்று அவன் கற்பனை செய்து கொண்டிருந்தான். ஆனால், தற்போது அபூபக்ருடைய நன்மையும், இயைச்சமும், மேன்மையும் முஸ்லிம்களால் ஒப்புக் கொள்ளப்படுவதையும் அவன் கண்டான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தொழ வைப்பதற்கு வருகை தராதபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இடத்தில் அபூபக்ர் (ரலி) அவர்களே தொழ வைத்து வந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் ஒரு ஃபத்வா கேட்க சந்தர்ப்பம் கிடைக்காத நிலையில் முஸ்லிம்கள் அபூபக்ர் (ரலி) அவர்களிடமே ஃபத்வா கேட்டு வந்தனர். எதிர்கால அரசாட்சி தனக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அமர்ந்திருந்த அப்துல்லாஹ் பின் அபீ சுலூல்

இதைக் கண்ட போது அவனுக்கு மிகவும் அதிகமான கவலை ஏற்பட்டது. இதனை அகற்ற வேண்டும் என்று அவன் விரும்பினான். எனவே இந்த விவகாரத்தை நீக்குவதற்காகவும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பிரபல்யம் மற்றும் அன்னாருடைய மகத்துவத்தை முஸ்லிம்களின் பார்வையிலிருந்து வீழ்த்துவதற்காகவும் அவன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் மீது பழிசுமத்தினான். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் மீது குற்றம் சுமத்தப்படுவதன் காரணமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது வெறுப்பு உருவாக வேண்டும் மேலும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் மீதான அந்த வெறுப்பின் விளைவாக ஹஸ்ரத் நபி (ஸல்) மற்றும் முஸ்லிம்களுக்கு மத்தியில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு கிடைத்திருந்த கண்ணியம் குறைந்து விடும். மேலும் எதிர்காலத்தில் அன்னார் கலீஃபா ஆகுவதற்கான வாய்ப்பும் இல்லாமல்போய் விடும் என்பதே இதன் மூலம் அவனது திட்டமாக இருந்தது.

ஆக, அல்லாஹ் திருக்குர்ஆனில் இதே விவகாரத்தை குறிப்பிட்டுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

إِنَّ الَّذِيْنَ جَآءُوْ بِالْإِفْكِ عُصْبَةٌ مِّنْكُمْ

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது பழிசுமத்திய மக்கள் முஸ்லிம்கள் என்றழைக்கப்பட்ட உங்களைச் சார்ந்த ஒரு கூட்டத்தினரே ஆவார்கள்.

ஆனால், அல்லாஹ் கூறுகின்றான்:

لَا تَحْسَبُوْهُ شَرًّا لَّكُمْ

இந்த பழி ஏதாவது தீய விளைவை ஏற்படுத்தும் என்று எண்ணாதீர்கள். மாறாக, இந்த குற்றச்சாட்டும் உமது மேன்மை மற்றும் முன்னேற்றத்திற்கான காரணியாக அமையும். எனவே அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

அல்லாஹ் கூறுகின்றான். பாருங்கள்! தற்போது நாம் கிலாஃபத் தொடர்பாகவும் விதிமுறைகளை எடுத்துரைத்து விடுகின்றோம். மேலும் உங்களுக்கு இதனையும் கூறிவிடுகின்றோம். இந்த நயவஞ்சகர்கள் அழுத்தம் கொடுத்து பார்த்துக் கொள்ளட்டும். அவர்கள் தோல்வியடைவார்கள். மேலும் நாம் கிலாஃபத்தை நிலை நாட்டியே தீருவோம். ஏனெனில் கிலாஃபத் நபித்துவத்தின் ஓர் அங்கமாகும். மேலும் இறை ஒளியை பாதுகாப்பாக வைப்பதற்கான ஒரு வழிமுறையாகும்.

(குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 18, பக்கம் 451- 455)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

சூரா அந்நூரின் தொடக்கம் முதல் அதன் இறுதி வரை எவ்வாறு ஒரே கருத்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்பதை தற்போது பாருங்கள்! முதலில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது சுமத்தப்பட்ட அந்த பழியைக் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது பழிசுமத்தியவர்களின் நோக்கம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை இழிவுபடுத்த வேண்டும். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் அன்னாருக்கு இருந்த தொடர்பு சீர்கெட்டு விட வேண்டும். மேலும், அதன் விளைவாக முஸ்லிம்களின் பார்வையிலிருந்தும் அன்னாரின் செல்வாக்கு குறைந்து விடவேண்டும். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணத்திற்கு பிறகு அன்னார் கலீஃபாவாக ஆகிவிடக் கூடாது என்பதாகவே இருந்தது. ஏனெனில், அப்துல்லாஹ் பின் அபீ சுலூல் இந்த விஷயத்தைக் கணித்திருந்தான். அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பிறகு முஸ்லிம்களின் பார்வை எவர் மீதாவது விழும் என்றால் அது அபூபக்ர் (ரலி) மீதே விழும் என்பதை அவன் கணித்திருந்தான். மேலும் அபூபக்ர் (ரலி) அவர்கள் மூலமாக கிலாஃபத் நிலைபெற்றுவிட்டால் பின்னர் அப்துல்லாஹ் பின் அபீ சுலூலின் அரசாட்சிக்கான கனவு ஒருபோதும் நிறைவேறாது என்பதையும் அவன் அறிந்திருந்தான். எனவே அல்லாஹ் இந்த குற்றச்சாட்டை குறிப்பிட்ட பிறகு, உடனேயே கிலாஃபத்தையும் குறிப்பிட்டுள்ளான். மேலும் கூறினான்:

கிலாஃபத் என்பது மன்னராட்சி அல்ல. மாறாக அது இறை ஒளியை நிலைநாட்டுவதற்கான ஒரு வழிமுறையாகும். எனவே அதனை நிலைநாட்டுவதை அல்லாஹ் தனது கரத்தில் வைத்துள்ளான். அது வீணாகுவது என்பது நபித்துவ ஒளி மற்றும் இறை ஒளி வீணாகிவிடுவது ஆகும். எனவே அவன் நிச்சயமாக, அந்த ஒளியை நிலைநாட்டுவான். நபித்துவத்திற்கு பிறகு ஒருபோதும் மன்னராட்சியை நிலை பெற அனுமதிக்க மாட்டான். அவன், தான் விரும்புபவரை கலீஃபாவாக ஆக்குவான். இன்னும் கூறப்போனால், முஸ்லிம்களிலிருந்து ஒருவரையல்ல பலரை கிலாஃபத்தில் அமரச் செய்து ஒளியின் காலத்தை நீட்டித்துவிடுவான் என்று அவன் வாக்குறுதி வழங்குகின்றான்.

இந்தக் கருத்து ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறி வந்த கருத்தைப் போன்றதாகும். அதாவது கிலாஃபத் என்பது விருப்பப்படி குடித்துக் கொள்ளும் சோடாவாட்டர் அல்ல.

அதேபோன்று அல்லாஹ் கூறினான்: நீங்கள் பழிசுமத்த விரும்பினால் நிச்சயம் பழி சுமத்திக் கொள்ளுங்கள். ஆனால், உங்களால் கிலாஃபத்தை அழிக்கவும் முடியாது. அபூபக்ரை கிலாஃபத்திலிருந்து இழப்பிற்குரியவராகவும் ஆக்க முடியாது. ஏனெனில், கிலாஃபத் ஓர் ஒளியாகும். அது ஒளியின் வெளிப்பாட்டிற்கான ஒரு வழிமுறையாகும். அதனை மனிதன் தனது திட்டங்களால் எவ்வாறு அழிக்க முடியும்?

அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்: இதேபோன்று, கிலாஃபத்தின் இந்த ஒளி இன்னும் சில வீடுகளிலும் காணப்படுகின்றது. எந்த மனிதனும் தனது முயற்சிகளாலும், தனது சதித்திட்டங்களாலும் அந்த ஒளி வெளிப்படுவதிலிருந்து தடுத்து நிறுத்த முடியாது. (குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 18, பக்கம் 457)

எவ்வாறு இருப்பினும், இது கிலாஃபத் தொடர்பான ஒரு கருத்து ஆகும். அது தொடர்பாக அன்னார் (ரலி) அவர்கள் குத்பா வழங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஓர் அந்தஸ்து இருந்தது (என்று தெரிய வருகிறது). பின்னர் அல்லாஹ்வின் செயல் சாட்சியத்திலிருந்தும் நபித்துவத்திற்கு பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கு ஏற்ப நிலை பெற இருந்த கிலாஃபத் தொடர் நிலைபெற்றது. அதன் பிறகு மன்னராட்சி வந்தது என்பது பின்னர் நிகழ்ந்த விஷயமாகும். மேலும், அல்லாஹ்வின் வாக்குறுதிகளுக்கு ஏற்ப ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலமாக அந்த அமைப்பு (தற்போது) மீண்டும் நிலைபெற்றுள்ளது.

அடுத்து, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பணிவு மற்றும் தாழ்மை குணம் குறித்து வருகின்றது. ஹஸ்ரத் ஸயீத் பின் முஸய்யப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது சில ஸஹாபிகளுடன் ஒரு சபையில் அமர்ந்திருந்தார்கள். ஒரு நபர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் சண்டையிட்டார். மேலும் அன்னாருக்கு துன்பம் கொடுத்தார். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அமைதி காத்தார்கள். அந்த நபர் இரண்டாவது முறை துன்பம் கொடுத்தார். அப்போதும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மௌனம் காத்தார்கள். அந்த நபர் மூன்றாவது முறையும் துன்பம் கொடுத்தார். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதிலடி கொடுத்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதில் கொடுத்தபோது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எழுந்து நின்றுவிட்டார்கள். அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் என் மீது அதிருப்தி அடைந்துள்ளீர்களா? என ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, விண்ணிலிருந்து ஒரு வானவர் இறங்கினார். அவர் உம்மைக் குறித்து கூறப்பட்டுக் கொண்டிருந்த விஷயங்களை பொய்படுத்திக் கொண்டிருந்தார். நீர் பதிலடி கொடுத்தபோது ஷய்த்தான் வந்துவிட்டான். மேலும் ஷய்த்தான் அமரக்கூடிய சபையில் நான் அமரக்கூடியவன் அல்ல என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (சுனன் அபீ தாவூத், கிதாபுல் அதப், ஹதீஸ் எண்: 4896)

அடுத்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அபூபக்ரே! மூன்று விஷயங்கள் உள்ளன. அவை உண்மையாகும். ஓர் அடியார் மீது ஒரு விஷயத்தின் மூலம் அநீதியிழைக்கப்பட்டால் அவர் அல்லாஹ்விற்காக மட்டும் அதை பொறுத்துக் கொண்டால் அல்லாஹ் தனது உதவியின் மூலமாக அவரை கண்ணியத்திற்குரியவராக ஆக்கிவிடுகின்றான். ஒருவர் நன்கொடைக்கான வாசல்களை திறப்பதன் மூலம் உறவுகளை பேணுவதற்கான எண்ணம் அவருக்கு இருக்கும் என்றால் அல்லாஹ் அதன் மூலம் அவருக்கு செல்வச் செழிப்பில் மேலும் முன்னேற்றம் வழங்குகின்றான். மூன்றாவது விஷயம் இதுவாகும். அதாவது, யாசிப்பவருக்கான வாசலை திறக்கின்ற ஒரு நபரின் இருந்து அவரின் எண்ணம் செல்வத்தின் மிகுதியாக இருக்குமென்றால் பின்னர், அல்லாஹ் அவரை அதன் மூலம் குறைவிலும் பற்றாக்குறையிலும் முன்னேறச் செய்து விடுவான்.

(மஜ்மஃ அஸ்வாயித், தொகுதி 8, பக்கம் 247, ஹதீஸ் எண்: 13698, வெளியீடு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2001)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்

(அலை) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நற்பண்புகளை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்:

அன்னார் (ரலி) முழுமையான இறை ஞானம் படைத்திருந்த அல்லாஹ்வை அறிந்தவரும், மிகவும் மென்மையான இயல்பு படைத்தவரும், மிகவும் பரிவு மிக்க இயல்பிற்கு சொந்தக் காரராகவும் இருந்தார்கள். மேலும், பணிவு மற்றும் தாழ்மை குணத்தின் நிலையில் வாழ்வை கழிப்பவராகவும் அன்னார் (ரலி) இருந்தார்கள். மிகவும் மன்னிக்கூடியவராகவும், பரிவு மற்றும் கருணையின் உருவமாகவும் அன்னார் (ரலி) திகழ்ந்தார்கள். அன்னார் (ரலி) தமது நெற்றியின் ஒளியினால் கண்டறியப்பட்டு வந்தார்கள். ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுடன் அன்னாருக்கு ஆழமான தொடர்பு இருந்தது. அன்னாரின் ஆன்மா பின்வருபவர்களிலும் சிறந்தவருமான முஹம்மது (ஸல்) அவர்களின் ஆன்மாவுடன் தொடர்பு கொண்டிருந்திருந்தது. எந்த ஒளி அன்னாரின் எஜமானரையும், இறை நேசரையும் மூடியிருந்ததோ அதே ஒளி அன்னாரையும் மூடியிருந்தது. இறைத் தூதர் (ஸல்) அவர்களின் ஒளியின் நுட்பமான நிழலிலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க நன்மையின் கீழும் அன்னார் மறைந்திருந்தார்கள். திருக்குர்ஆனை புரிவதிலும், ஸய்யதுர் ரஸூல் மற்றும் மனித இனம் பெருமை கொள்ளத்தக்க தலைவர் (ஸல்) அவர்கள் மீதான அன்பிலும் மற்ற அனைத்து மக்களிலிருந்தும் அன்னார் (ரலி) தனித்தன்மை வாய்ந்தவராக இருந்தார்கள். அன்னார் (ரலி) மீது மறுமை வாழ்க்கை மற்றும் இறை இரகசியங்கள் இறங்கியபோது அன்னார் (ரலி) அனைத்து உலகத் தொடர்புகளையும் முறித்துக் கொண்டார்கள். மேலும் பௌதீக தொடர்புகளை பின்னால் வீசிவிட்டார்கள். மேலும், தமது நேசத்திற்குரியவரின் வடிவின் அச்சாக மாறிவிட்டார்கள். ஏக இறைவனுக்காக மட்டும் தனது அனைத்து விருப்பங்களையும் கைவிட்டுவிட்டார்கள். அனைத்து பௌதீக ஆசைகளிலிருந்தும் அன்னாரின் ஆன்மா தூய்மை அடைந்துவிட்டது. மேலும் அகில உலகங்களின் இறைவனின் திருப்தியில் தம்மை மாய்த்துக் கொண்டுவிட்டது. மேலும் உண்மையான இறை நேசம் அன்னாரின் அனைத்து நாடி நரம்புகளிலும், உள்ளத்தின் ஆழம் வரையிலும், உடலின் ஒவ்வொரு அணுவிலும் ஊடுருவி விட்டபோது அன்னாரின் செயல்களிலும், கூற்றுகளிலும் அன்னாரின் அமர்வதிலும், எழுவதிலும் அதன் ஒளிகள் வெளிப்பட்டுவிட்டன. எனவே அன்னாருக்கு ஸித்தீக் எனும் பெயர் சூட்டப்பட்டது. மேலும் மிகவும் அதிகமாக, புத்தம் புதிதாக ஆழமான ஞானத்தை அருளுபவர்களில் மிகவும் சிறந்தவற்றை அருளுபவனான இறைவனின் சன்னிதானத்திலிருந்து அன்னாருக்கு அருளப்பட்டது. ஸித்தீக் எனும் ஓர் உறுதியான நற்பண்பு இயல்பில் சிறப்பிற்குரியதாக இருந்தது. ஸித்தீக்கின் தாக்கமும், ஒளிகளும் அன்னாருடைய ஒவ்வொரு கூற்றிலும், செயலிலும், அசைவிலும் எண்ணத்திலும் வெளிப்பட்டு வந்தன. அன்னார் (ரலி) வானங்கள் மற்றும் பூமிகளின் இறைவன் புறமிருந்து அருட்கொடைகளை பெற்ற கூட்டத்தினருடன் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

அன்னார் (ரலி) நபித்துவ புத்தகத்தின் ஓர் அழகிய பிரதியாக இருந்தார்கள். அன்னார் அருட்களின் வாசல்களாகவும், ஆண்மகன்களின் இமாமாகவும் திகழ்ந்தார்கள். நபிமார்களின் அமைப்பைக் கொண்டிருந்த தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களைச் சேர்ந்தவராக அன்னார் (ரலி) இருந்தார்கள்.

அடுத்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எமது இந்தக் கூற்றை எந்த வகையிலும் மிகைப்படுத்திக் கூறப்பட்டதாக எவரும் கருத வேண்டாம். மேலும் அதேபோன்று அதனை சாதாரண தன்மை கொண்டதாகவும் கருதவும் வேண்டாம். மேலும் அதனை எளிமையாக கடந்து செல்லும் விஷயமாகவும் கருத வேண்டாம். மேலும் அதனை அன்பின் நீரூற்றிலிருந்து பெருக்கெடுத்ததாகவும் கருதிக் கொள்ள வேண்டாம். மாறாக, இது எப்படிபட்ட உண்மைத்துவம் என்றால் இது கண்ணியத்திற்குரிய இறைவனின் சன்னிதானத்திலிருந்து எனக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது, அன்னார் (அலை) எடுத்துரைத்துள்ள ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இந்த அந்தஸ்தும், அன்னாரின் இந்த உயர் தகுதியும், அன்னார் (அலை) செய்துள்ள இந்த புகழ்ச்சியும் அல்லாஹ் நேரடியாக தம்மிடம் வெளிப்படுத்திய விஷயங்களாகும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

அடுத்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

அன்னாரின் (ரலி) அவர்களின் நோக்கம் அனைத்து மக்களின் இறைவன் மீது முழுமையான நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதாகும். மேலும் காரணிகளின் பக்கம் குறைவாக கவனம் செலுத்த வேண்டும் என்பதும் ஆகும். அன்னார் அனைத்து மரியாதைகளிலும் நமது இறைத் தூதர் (ஸல்) அவர்களும், எஜமானருமான ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய நிழலாக இருந்தார்கள். மேலும் படைப்பினங்களில் சிறந்தவராகிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் ஆழமான தொடர்பு இருந்தது. இதன் காரணமாகவே ஹுஸூர் (ஸல்) அவர்களின் அருட்களில் இருந்து அன்னாருக்கு நொடிப்பொழுதில் கிடைத்தவைகள் நீண்ட காலமாக முயற்சி செய்தவர்களுக்கு கிடைக்கவில்லை. (சிர்ருல் குலஃபா, உருது மொழியாக்கம், நஷ்ரோ இஷாஅத் ரப்வா, பக்கம் 101-103)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பதினான்கு தோழர்களுடன் பங்கு பெறுதல் :

இது தொடர்பாக குறிப்பு வருகிறது. அதாவது ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக ஒவ்வொரு நபிக்கும் ஏழு நெருங்கிய நண்பர்கள் வழங்கப்பட்டிருந்தனர் அல்லது தோழர்கள் (வழங்கப்பட்டிருந்தனர்) என்று கூறினார்கள். தோழர்கள் என்று மட்டுமே கூறினார்கள். மேலும் எனக்கு பதினான்கு நபர்கள் வழங்கப்பட்டனர். அவர்கள் எவர்? என்று நாங்கள் கேட்டோம். அன்னார் (ரலி) கூறினார்கள்:

நானும் எனது இரு மகன்களும், ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி), ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி). அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும், அன்னாரது இரு மகன்கள்,ஹஸ்ரத் ஜஃபர் (ரலி), ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி), ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி), ஹஸ்ரத் பிலால் (ரலி), ஹஸ்ரத் சல்மான் (ரலி), ஹஸ்ரத் அம்மார் (ரலி), ஹஸ்ரத் மிக்தாத் (ரலி), ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூத் (ரலி) ஆகியோர் ஆவர்.

(சுனன் திர்மதி, கிதாபுல் மனாகிப்,மனாகிபுல் ஹஸன் வல் ஹுஸைன், ஹதீஸ் எண்:3785)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் புறமிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களுக்கு ஹஜ்ஜில் தலைமைத்துவத்திற்கான பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக வருகின்றது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களை ஹஜ்ஜின் அமீராக நியமித்து மக்காவிற்கு அனுப்பி வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தபூக் போரிலிருந்து திரும்பி வந்தபோது அன்னார் (ஸல்) ஹஜ் செய்வதற்கான எண்ணம் கொண்டார்கள். பின்னர், இணைவைப்பாளர்கள் மற்ற மக்களுடன் சேர்ந்து ஹஜ் செய்கின்றனர். மேலும் இணை வைத்தலுக்கான சொற்களை கூறுகின்றனர். மேலும் கபஅத்துல்லாஹ்வை நிர்வாணமாக வலம் வருகின்றனர் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கூறப்பட்டது. எனவே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த ஆண்டு ஹஜ் செய்வதற்கான எண்ணத்தை கைவிட்டுவிட்டார்கள். மேலும், ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களை

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

ஹஜ்ஜிற்கான அமீராக நியமித்து அனுப்பி வைத்தார்கள். (அர்ரோஸுல் அன்ஃப், தொகுதி 4, பக்கம் 318, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்) (உம்ததுல் காரீ, ஸஹீஹ் புகாரி, தொகுதி 9, பக்கம் 384, ஹதீஸ் எண்: 1622)

ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் முந்நூறு ஸஹாபிகளுடன் மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த மக்களுடன் குர்பானி கொடுப்பதற்காக இருபது கால்நடைகளை அனுப்பி வைத்தார்கள். அவற்றின் கழுத்துகளில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சுயமே தமது கரங்களால் குர்பானியின் அடையாளமாக வளையங்களை அணிவித்து அடையாளமிட்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் சுயமே தம்முடன் குர்பானி கொடுப்பதற்காக ஐந்து கால்நடைகளை கொண்டு சென்றார்கள். (அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 3, பக்கம் 295, தாருல் குதுபில் இல்மியா-லெப்னான்)

அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் சூரா தவ்பாவின் தொடக்க வசனங்களை அந்த ஹஜ்ஜின் சந்தர்ப்பத்தில் அறிவிப்பு செய்திருந்தார்கள். அதன் விளக்கம் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்பிலும், பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்பின் தொடக்கத்திலும் ஒரு குத்பாவில் நான் எடுத்துரைத்துவிட்டேன். எவ்வாறு இருப்பினும், இங்கு நான் இதனை ஒருமுறை எடுத்துரைக்கின்றேன். அதாவது, சூரா பராஅத் அதாவது சூரா தவ்பா ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீது இறங்கியபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை ஹஜ்ஜின் அமீராக நியமித்து ஏற்கனவே அங்கு அனுப்பி வைத்திருந்தார்கள். அந்நிலையில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் (ஸல்) இந்த சூராவை அங்கு ஓதிக் காட்டுவதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வையுங்கள் என்று கூறப்பட்டபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது குடும்பத்தைச் சார்ந்த ஒருவரை தவிர வேறு எவரும் என் புறமிருந்து இந்த கடமையை ஆற்ற முடியாது.

பின்னர், அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை அழைத்து வரும்படி கூறினார்கள். மேலும், சூரா தவ்பாவின் தொடக்கத்தில் கூறப்பட்டுள்ளவற்றை எடுத்துச் செல்லும்படி அன்னாரிடம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும் குர்பானி நாளன்று மனாவில் மக்கள் ஒன்றுகூடியிருக்கும்போது இந்த அறிவிப்பைச் செய்யுங்கள்: அதாவது, சுவர்க்கத்தில் எந்த நிராகரிப்பாளரும் நுழைய முடியாது. இந்த ஆண்டிற்கு பிறகு எந்த ஒரு இணை வைப்பாளருக்கும் ஹஜ் செய்வதற்கு அனுமதி கிடையாது. அதேபோன்று நிர்வாண உடலுடன் பைத்துல்லாஹ்வை வலம் வருவதற்கும் அனுமதி கிடையாது. எவருடன் எல்லாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஏதாவது உடன்படிக்கை செய்துள்ளார்களோ அதன் காலக்கெடு முழுமை செய்யப்படும் இவ்வாறு அறிவிப்பு செய்யும்படி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் கூறினார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அந்த கட்டளைகளின்படி புறப்பட்டுச் சென்றார்கள். வழிப்பாதையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை சந்தித்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை வழிப்பாதையில் கண்டபோது தாங்கள் (ரலி) அமீராக நியமிக்கப்பட்டுள்ளீர்களா? அல்லது தாங்கள் (ரலி) எனக்கு கீழ் செயல்படுவீர்களா? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு, நான் தங்களுக்கு கீழ் (பணிபுரிவேன்) என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்.பின்னர் இருவரும் புறப்பட்டுச் சென்றார்கள்.

நான் தங்களுக்கு கீழ் செயல்படுவேன். ஆயினும், இந்த வசனங்களை நான் ஓதிக்காட்டுவேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்களின் ஹஜ்ஜின் விவகாரங்களை கண்காணித்தார்கள். மேலும், அரேபியர்கள் அறியாமை காலகட்டத்தில் முகாமிட்டு வந்த தங்களது (பழைய) அந்த இடத்திலேயே இந்த வருடமும் முகாமிட்டார்கள். குர்பானி கொடுப்பதற்கான நாள் வந்தபோது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கட்டளைக்கு ஏற்ப மக்களுக்கு மத்தியில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியிருந்த விஷயங்களை அறிவிப்பு செய்தார்கள். நான் கூறியதுபோன்று இதன் விளக்கத்தை நான் முன்பே கூறியுள்ளேன்.

(அஸ்ஸீரத்துன்னபவிய்யா லி இப்னி ஹிஷ்ஷாம், பக்கம் 832, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் லெப்னான், 2001)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு எதிர்வரும் நாட்களிலும் இன்ஷா அல்லாஹ் நடைபெறும். தற்போது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைக்க விரும்புகின்றேன். முதலாவது நற்குறிப்பு சவ்த்ரி முஹம்மது யூசுஃப் சாஹிப் அவர்களின் மகனாகிய மதிப்பிற்குரிய முஹம்மது தாவூத் ஸஃபர் சாஹிப் அவர்களுடையதாகும். ஜமாஅத்தின் முரப்பியாக இருந்தார்கள். இங்கு யூ.கேவில் ரகீம் அச்சகத்தில் இருந்தார்கள். நவம்பர் 16 ஆம் தேதி அன்னார் மரணமடைந்துள்ளார்கள். அன்னாரின் வயது 48 ஆகும்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னாருடைய ஜனாஸா இங்கு வந்துள்ளது. இன்ஷா அல்லாஹ் தொழுகைகளுக்குப் பிறகு நான் ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன்.

1998- ஆம் ஆண்டில் அன்னார் ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவிலிருந்து ஷாஹித் பட்டப்படிப்பை முழுமை செய்தார்கள். பின்னர் ஜமாஅத்தின் முரப்பியாக பல்வேறு இடங்களில் பணி செய்து வந்தார்கள். பின்னர் 2001-ஆம் ஆண்டில் இங்கிலாந்து வந்துவிட்டார்கள். இங்கு ரகீம் அச்சகத்தில் இஸ்லாமாபாத்தில் அன்னார் பணியமர்த்தப்பட்டார்கள். மிகவும் ஆர்வத்துடன் தொண்டுகள் ஆற்றி வந்தார்கள். கிலாஃபத்துடன் மிகவும் ஆழமான பற்றிற்கான தொடர்பு இருந்தது. இஸ்லாமாபாத்தில் தங்கியிருந்தபோது சில காலம் இஸ்லாமாபாத் ஜமாஅத்தின் தலைவராகவும் இருந்துள்ளார்கள். உம்ரா செய்வதற்கும் நற்பேறு கிடைத்துள்ளது. மர்ஹூம் மூஸியாகவும் இருந்தார்கள். அன்னார் பின்விட்டுச் சென்றவர்களில் பெற்றோர்கள் மற்றும் மனைவி மட்டுமின்றி மூன்று மகன்களும், ஒரு மகளும் அடங்குவர்.

அன்னாரின் தந்தை சவ்த்ரி யூசுஃப் சாஹிப் கூறுகின்றார்கள்:

தாவூதிடம் முபல்லிக் ஆகும்படி நான் கூறினேன். அப்போது அவர் எனது விருப்பத்தை முழுமையாக நிறைவேற்றி கொடுத்துவிட்டார். முரப்பியாக ஆகுவதற்கு பகரமாக உலகக் கல்வி கற்பதில் இவ்வளவு முயற்சிகள் செய்தால் நீங்கள் நல்ல வேலைவாய்ப்பை பெற முடியும். மேலும் உங்களது குடும்பத்தின் பொருளாதார நிலைமைகளையும் சிறப்பானதாக ஆக்கிக் கொள்ள முடியும் என்று சில மக்கள் அவரிடம் கூறினர். ஆனால், அத்தகைய ஆலோசனைகளை தாவூத் சாஹிப் முற்றிலுமாக நிராகரித்துவிட்டார். ஜாமிஆவிலிருந்து ஷாஹித் முரப்பியாக ஆனதிலிருந்து மரணம் வரை முழுமையான நன்றியுணர்வுடன் தமது வக்ஃபை நிறைவேற்றினார். மிகவும் கீழ்படிந்த மகனாக இருந்தார்.

தந்தை கூறுகின்றார்கள்: எனது எல்லா கூற்றுகளையும் ஏற்று நடந்து வந்தார். ஒருபோதும் நிராகரித்ததில்லை. எப்போதும் எனக்கு மகிழ்ச்சியை வழங்குவதற்கு முயற்சி செய்தார். பொருளாதார கஷ்டங்களுக்கு மத்தியிலும் ஒருபோதும் தமது வக்ஃபை கைவிடுவதற்கு எண்ணம் கொண்டதில்லை. ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கல்வி பயின்றபோது சைக்கிள் பஞ்சர் ஆகிவிட்டால் சைக்கிள் பஞ்சரை சரி செய்வதற்கு பொருளாதார கஷ்டத்தின் காரணமாக பணம் இல்லாமல் இருந்து வந்தது. கூறுகின்றார்கள்: வீட்டிலிருந்து சைக்கிளில் காற்றை நிரப்பிவிட்டு ஜாமிஆ சென்று வந்தார்கள். திரும்பி வரும்போதும் அவ்வாறே செய்து வந்தார்கள். ஒருபோதும் எவ்வித முறையீடும், புகாரும் செய்ததில்லை. காலத்தின் கலீஃபாவிற்கு கட்டுபடக்கூடியவராகவும், கலீஃபாவின் நல்விருப்பத்தை புரியக்கூடிய முரப்பியாகவும் இருந்தார்கள்.

அன்னாரின் மனைவி முபாரகா சாஹிபா கூறுகின்றார்கள்: 22 ஆண்டுகளாக எங்களது இல்லற வாழ்க்கை இருந்து வந்துள்ளது. மிகவும் மென்மையான உள்ளம் கொண்டவராகவும், கடின உழைப்பாளியாகவும், இறைவன் மீது முழுமையான நம்பிக்கை கொண்டவராகவும், எல்லாருக்கும் தன்னலமற்ற முறையில் தொண்டாற்றக் கூடியவராகவும் நான் அன்னாரைக் கண்டேன். வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களில் சில விஷயங்கள் வெளிப்படையில் சாத்தியமற்றதாக இருந்துள்ளன. நான் அதுபோன்ற சந்தர்ப்பத்தில் இது எப்படி சாத்தியம்? என்று கூறினேன். அப்போது, அல்லாஹ்வின் மீது தவக்குல் (முழுமையான நம்பிக்கை) வையுங்கள் எல்லாம் சரியாகிவிடும் என்று அன்னார் என்னிடம் கூறுவார்கள். பின்னர் அப்படியே நிகழ்ந்தும்விடும்.

நல்ல மனிதர்களாக ஆகவேண்டும். ஒருபோதும் எவருக்கும் துன்பத்தை கொடுப்பதற்கு காரணியாக இருக்கக்கூடாது

என்று எப்போதும் பிள்ளைகளுக்கு அறிவுரை செய்து வருவார்கள். இன்று நான் என்ன நிலைமையில் இருக்கின்றேனோ அதற்கு கிலாஃபத்துடனான தொடர்பின் காரணமாகவே ஆகும். மேலும் ஜமாஅத்தின் காரணமாகவே இன்று நான் நல்ல நிலைமையில் இருக்கின்றேன். நான் எனது வக்ஃபை சரியாக நிறைவேற்றுவதற்கு அல்லாஹ் எனக்கு நற்பேறு வழங்கவேண்டும் என்று பிள்ளைகளை அமர்த்தி பெரும்பாலும் அவர்களிடம் இவ்வாறு கூறிவருவார்கள். அன்னாருக்கு எப்போதும் இந்த விருப்பம் இருந்து வந்தது.

அன்னாரின் மகளான தர்மானா சாஹிபா கூறுகின்றார்கள்:

நாங்கள் சிறந்த அஹ்மதி முஸ்லிம்களாக ஆக வேண்டும் மேலும், அண்டை அயலாரைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஒருபோதும் எங்களின் காரணமாக எவருக்கும் எந்த துன்பமும் ஏற்படக் கூடாது என்ற விஷயத்தை மட்டுமே எங்களிடம் எங்கள் தந்தை எதிர்பார்த்து வந்தார்கள்.

மூத்த மகனான ரூஹான் கூறுகின்றார்கள்:

எங்களது தந்தைக்கு எங்களின் ஆன்மீக தர்பிய்யத் விவகாரங்களில் மிகுந்த அக்கறை இருந்து வந்தது. நாங்கள் எப்போது எந்த கேள்விகேட்டாலும், அன்னார் ஒரு முரப்பியாக இருந்ததன் காரணமாக திருக்குர்ஆன் போதனையின் ஒளியிலும் மார்க்க அம்சத்தின் அடிப்படையிலும் பதில் கொடுப்பதற்கு முயற்சி செய்து வந்தார்கள். சிறிய மகன் ஃபவாத் சாஹிப் ஆவார். அவரது வயது 15 ஆகும். அவர் கூறுகின்றார்:

அன்னாருக்கு கேன்சர் நோய் வந்துவிட்டது. இறுதி நாட்களில் அதன் தாக்கம் மிக தீவிரவாக இருந்தது. எனவே இறுதி நாட்களில் அன்னார் என்னிடம் இவ்வாறு கூறினார்கள்:

நீ ஓர் அழகிய வாழ்க்கையை வாழ்வதை நான் காண விரும்பியிருந்தேன். எனினும் எனது அல்லாஹ்வின் விருப்பம் வேறொன்றாக உள்ளது. நான் அவனது திருப்தியில் திருப்தி கொள்கிறேன்.

எவ்வாறு இருப்பினும், நன்மை, ஜமாஅத்துடன் தொடர்பு வைப்பது, கிலாஃபத்துடன் தொடர்பு வைப்பது ஆகியவற்றை மேற்கொள்வதற்கு பிள்ளைகளுக்கு அறிவுரை வழங்கி வந்தார்கள். அன்னாரின் அறிவுரைகளின்படி அவர்கள் செயல்படுவதற்கு அல்லாஹ் அவர்களுக்கு நற்பேறு வழங்குவானாக. மேலும், அவர்களுக்காக அன்னார் செய்த துஆக்களையும் ஒப்புக் கொள்வானாக.

அன்னாரை அறிந்த நபர்களும், முரப்பிமார்களும், அனைவரும் பொதுவாக இந்த விஷயத்தை எழுதியுள்ளனர்: அதாவது மிகவும் சிரித்த முகத்துடன் பழகக்கூடியவராகவும், சபைகளில் அமரக்கூடியவராகவும், இதயத்தை கவரக்கூடியவராகவும், அனைவரின் விருப்பத்தையும் பெறக்கூடிய இயல்பிற்கு சொந்தக் காரராகவும் மர்ஹூம் இருந்தார்கள். மேலும் தமது தொழிலில் கம்ப்யூட்டர் மற்றும் ஆர்ட் வொர்க்கில் புலமை பெற்றவராகவும் இருந்தார்கள். முரப்பியாக இருந்தார்கள். எனினும், தொழில் நுட்ப பணிகளிலும், எடிட்டிங் பணிகள் போன்றவற்றில் அன்னாருக்கு நல்ல திறமை இருந்தது. ரகீம் அச்சகத்தில் அன்னார் மிகவும் நன்றாக பணி செய்துள்ளார்கள். தனது திறமையை பயன்படுத்துவதற்கு அன்னாருக்கு மிகவும் நல்ல வாய்ப்புகளும் கிடைத்தன. ஜமாஅத்திற்கு ஆற்றும் தொண்டுகளை அன்னார் எப்போதும் அல்லாஹ்வின் அருளாகவும், தனது நற்பேறாகவும் கருதி வந்தார்கள்.

அடுத்து மற்றோர் உறவினரும் எழுதியுள்ளார்: பிறருக்கு உதவி செய்வதற்கு மிகவும் அமைதியாக வருவார்கள். மிகவும் மௌனமாக தேவையுடையவர்களுக்கு, உறவினர்களுக்கு பொருளாதார உதவியும் செய்து வந்தார்கள்.

அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும் பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக. மேலும் அன்னாரின் நன்மையை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக. மேலும், அன்னாரின் பெற்றோருக்கும் பொறுமையை வழங்குவானாக. (ஆமீன்)

இரண்டு ஜனாஸா காயிப் தொழுகைகளும் உள்ளன. அவற்றில் முதலாவது ஸ்பெயின் நாட்டின் முன்னாள் முபல்லிக் மதிப்பிற்குரிய மர்ஹூம் கரம் இலாஹி ஸஃபர் சாஹிப் அவர்களின் துணைவியார் ருகய்யா ஷமீம் புஷ்ரா சாஹிபா அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது.

إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னார் 1932-ல் காதியானில் பிறந்துள்ளார்கள். அல்லாஹ்வின் அருளினால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். பல ஆண்டுகள் வரை ஸ்பெய்னின் லெஜ்னா தலைவியாக தொண்டாற்றுவதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. அன்னாருக்கு மூன்று மகன்களும், மூன்று மகள்களும் உள்ளனர். அன்னாரின் ஒரு மகன் வழிப்பேரர் அதாவுல் முன்இம் தாரிக் வக்ஃபே நவ் திட்டத்தின் கீழ் இருக்கும் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் ஆவார். சென்ட்ரல் ஸ்பேனிஷ் டெஸ்கின் இன்சார்ஜ் ஆவார். அன்னாரின் ஒரு மகன் வழிப் பேத்திக்கு ஒரு முரப்பியுடன் திருமணம் நிகழ்ந்துள்ளது. இரண்டு மகன்களும் அல்லாஹ்வின் அருளினால் மார்க்கப் பணிகளை செய்து வருகின்றனர். அன்னாரின் மூத்த மகன் நாயிப் அமீராகவும் இருக்கின்றார். ருகய்யா சாஹிபாவின் தந்தை வழிப் பாட்டனார் மவ்லவி ஃபக்ருதீன் சாஹிப் மற்றும் தந்தை வழிப்பாட்டி பிபி சாஹிபா ஆவார்கள். அவர்கள் அடிப்படையில் பேரா ஊரைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் பைஅத் செய்த பிறகு காதியானிற்கு சென்றுவிட்டார்கள். அன்னாரின் தாய் வழிப் பாட்டானார் பாயி அப்துர் ரஹீம் சாஹிப் (ரலி) ஆவார்கள். அன்னார் அஜ்மீரைச் சேர்ந்தவராக இருந்தார்கள். துவக்கத்தில் சீக்கிய மார்க்கத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள். பின்னர், அன்னார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கரத்தில் பைஅத் செய்யும் நற்பேறு பெற்றார்கள். அன்னாரும் பைஅத்திற்கு பிறகு கல்வி பயில்வதற்காக காதியான் சென்றுவிட்டார்கள். எனவே தந்தை வழி மற்றும் தாய் வழி இருவழியிலும் ஸஹாபிகளாக இருந்துள்ளனர்.

ருக்கய்யா பேகம் சாஹிபாவைக் குறித்து அன்னாரின் மகன் எழுதியுள்ளார்:

தஃவத்துல் அமீர் புத்தகத்தின் மீது சிறப்பான ஆர்வம் இருந்தது. பலமுறை அதனை படித்துள்ளார்கள். இந்த புத்தகத்தைப் படித்த பிறகு எனது எண்ணத்தில் இருந்த ஏராளமான சந்தேகங்களுக்கும், ஐயங்களுக்கும் பதில்கள் கிடைத்து விட்டன என்றும் மேலும் 12 வயது முதலேயே எனது உள்ளத்தில் தொழுகையில் மிகுந்த ஆர்வம் இருந்தது என்றும் அன்னார் கூறிவந்தார்கள். தன்னை ஈமானின் வழிகளிலும், நேரான பாதையிலும் வழி நடத்த வேண்டும் என்று அன்னார் அல்லாஹ்விடம் வேண்டி வந்தார்கள். பர்தாவை மிகவும் பேணி வந்தார்கள். இந்த இயக்கத்தில் மற்ற பெண்களுக்கு ஒரு முன்மாதிரியான பெண்மணியாக திகழ்ந்தார்கள். நோயாளிகள் மற்றும் தேவையுடையவர்கள் மீது அனுதாபம் செலுத்தி வந்தார்கள். எல்லா சாத்தியமான வழிகளிலும் அவர்களுக்கு உதவி செய்வதற்கு தயாராக இருந்து வந்தார்கள்.

துவக்க காலத்தில் அன்னார் மௌலானா சாஹிப் அவர்களுடன் ஸ்பெயினிற்கு வருகை தந்தார்கள். அப்போது அன்னாருக்கு ஸ்பெயினில் ஏராளமான கடினங்களை எதிர்கொள்ள நேரிட்டது. பெரும்பாலும் தப்லீக் செய்ததன் காரணமாக மவ்லானா சாஹிபை காவல்துறை கைது செய்து வந்தது அல்லது வீட்டில் சோதனை நடத்தி வந்தது. தப்லீக் நடவடிக்கைகளுக்கான ஆதாரத்தை சேகரிப்பதற்காக காவல்துறை சோதனை நடத்தி வந்தது. ஆனால் இறுதியில் அல்லாஹ் தமக்கு நிச்சயம் உதவி செய்வான். மேலும் அனைத்து கடினங்களையும் நீக்கிவிடுவான் என்று அல்லாஹ்வின் அருளால், அன்னாரது கணவரைப் போன்று மர்ஹூமாவும் இந்த நம்பிக்கையில் நிலைபெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் குர்தபாவில் மஸ்ஜித் கட்டுவதற்காக உகந்த இடத்தை தேடும்படி மவ்லான சாஹிப் அவர்களுக்கு வழிகாட்டல் வழங்கியபோது அது தொடர்பாக மர்ஹூமா அவர்களும் எல்லா ரீதியிலும் உதவி செய்தார்கள்.

அன்னாருடைய மகன் எழுதியுள்ளார்:

மஸ்ஜித் பஷாரத் கட்டுமானம் தொடங்கியபோது அநேகமாக அனுதினமும் தமது கணவருடன் பேருந்து போன்றவற்றின் மூலம் குர்தபாவிலிருந்து பேத்ரூஆபாத் வரை கட்டுமானப் பணிகளின் முன்னெடுப்புகள் மற்றும் பணிகளை மேற்பார்வை செய்வதற்காக வருகை தந்தார்கள். அனைத்து செலவினங்களுக்கான பதிவுகளும் அன்னாரிடம் இருந்து வந்தன. முறையான கணக்காளரைப் போன்று அன்னார் மஸ்ஜித் கட்டுமானத்தில் பணி செய்தார்கள்.

அன்னாரின் மகன் ஃபஸ்லே இலாஹி கமர் கூறுகின்றார்கள்:

எங்களது தாயார் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் அறிவுரையை எப்போதும் தமது கருத்தில்

கொண்டிருந்தார்கள். அன்னார் (ரலி) கூறினார்கள்:

உங்களது டியூட்டிகளை கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் உங்களது கணவருக்கு ஆலோசனை வழங்க வேண்டும். நீங்கள் எப்படிப்பட்ட நாட்டிற்கு செல்கின்றீர்கள் என்றால் அங்கு சென்று நீங்கள் உங்களது கணவரை தப்லீக் பணிகளில் சோம்பேறியாக ஆக்கிவிடக் கூடாது. மாறாக, மேலும் சுறுசுறுப்பு மிக்கவராக ஆக்க வேண்டும். மரணத்திற்கு பிறகும் கூட உடன் இருப்பதற்கு நிறைய நேரம் இருக்கும்.

இந்த அடிப்படையை கருத்தில் கொண்டு நீங்கள் வாழ்க்கையின் இந்த நாட்களில் பணி செய்கின்ற நேரத்தை அதிக அதிகமாக பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

எவ்வாறு இருப்பினும், அன்னார் இந்த அறிவுரையின்படி செயல்பட்டு வந்தார்கள். எத்தகைய சூழல் ஏற்படட்டாலும் அன்னார் எப்போதும் அல்லாஹ்வின் திருப்தியைக் கருத்தில் கொண்டவாறு பொறுமையையும், தைரியத்தையும் மேற்கொண்டு வந்தார்கள். துவக்க கால நாட்கள் மிகவும் கடினமானதாக இருந்தன. ஆயினும், அன்னார் அவற்றையும் தைரியத்துடன் சகித்துக் கொண்டார்கள். எப்போதும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முதன்மை வழங்கி வந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் அறிவுரையின்படி அமல் செய்தவாறு ஐரோப்பாவின் எந்த தேசத்தில் ஒருநேரத்தில் இஸ்லாத்தின் பெயரை குறிப்பிடுவதே ஹராமாக கருதப்பட்டதோ அங்கு இஸ்லாமிய முன்மாதிரியை அன்னார் நிலைநாட்டினார்கள். ஸ்பெயினில் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை பரப்புவதில் அன்னாருடைய மாபெரும் பங்கு உள்ளது. அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக. (ஆமீன்)

மூன்றாவது நற்குறிப்பு ஸய்யத் ஸய்னுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் அவர்களின் மகளான மதிப்பிற்குரிய தாஹிரா ஹனீஃப் சாஹிபா அவர்களுடையதாகும். மேலும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் புதல்வனாகிய மிர்ஸா ஹனீஃப் சாஹிப் மர்ஹூம் அவர்களின் துணைவியாருடையதாகும். கடந்த நாட்களில் அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அல்லாஹ்வின் அருளினால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். நான் கூறியதுபோன்று அன்னார் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மருமகளாக இருந்தார்கள். மேலும் எனது மாமியாகவும் இருந்தார்கள்.

1936 ஆம் ஆண்டு காதியானில் பிறந்தார்கள். அன்னாரின் தந்தையார் ஸய்யத் ஸய்னுல்ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் ஆவார்கள். நான் கூறியதுபோன்று அன்னார் அதிகமான தொகுதிகளில் புகாரி ஹதீஸ் நூலிற்கு விரிவுரையும் எழுதியுள்ளார்கள். பெரும் அறிஞராக இருந்தார்கள். அன்னார் அரபு நாடுகளிலும் இருந்துள்ளார்கள். தாஹிரா பேகம் சாஹிபா அவர்களின் தாயார் பெயர் ஸய்யதா ஸாரா சாஹிபா ஆகும். அன்னார் தமாஸ்களை சேர்ந்தவராக இருந்தார்கள். அன்னார் அரேபிய பெண்மணியாக இருந்தார்கள். அன்னாரின் தந்தை வழிப் பாட்டனாராகிய ஹஸ்ரத் ஸய்யது அப்துஸ் ஸத்தார் சாஹிப் அவர்கள் மூலமாக அன்னாருடைய குடும்பத்தில் அஹ்மதிய்யத் தோன்றியது. 1901 ஆண்டு (மர்ஹூமாவின் தந்தை வழிப் பாட்டனாராகிய) அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்திருந்தார்கள். அதற்காக முழு குடும்பத்தையும் அல்லாஹ் இவ்வாறு வழிகாட்டினான். அதாவது, பிள்ளைகளுக்கும், பெரியவர்களுக்கும் கனவுகளின் மூலமாக வழிகாட்டிக் கொண்டிருந்தான். மேலும் அவர்களின் ஈமானை வலுவூட்டிக் கொண்டிருந்தான். ஹஸ்ரத் டாக்டர் ஸய்யது அப்துஸ் ஸத்தார் சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் தாய் வழிப் பாட்டனராக இருந்தார்கள். மதிப்பிற்குரிய தாஹிரா சாஹிபா 1972 முதல் 1990 வரை லஜ்னா இமாயில்லாஹ் ரப்வாவின் இஸ்லாஹ் வ இர்ஷாத் செயலராக தொண்டாற்றுவதற்கும் அன்னாருக்கு நற்பேறு கிடைத்துள்ளது. பின்னர், ஸிராலியோனிலும் தமது வாழ்க்கையை அர்ப்பணித்த கணவருடன் அன்னார் சில வருடம் நேரத்தை கழித்தார்கள். அல்லாஹ் அன்னாருக்கு மூன்று மகள்களையும், ஒரு மகளையும் வழங்கியுள்ளான்.

அன்னாரின் மூத்த மகள் அமத்துல் மூமின் கூறுகின்றார்கள்:

எங்கள் தாயார் எப்போதும் ஐவேளை தொழுகைகளை மட்டுமின்றி தஹஜ்ஜுத் தொழுகை, நோன்புகள் மற்றும் திருக்குர்ஆன் ஓதுவதை முறையாக பேணி வந்ததைக் கண்டு வந்துள்ளோம். இன்னும் கூறப்போனால், இஷ்ராக் போன்ற தொழுகைகளையும் தொழுது வந்துள்ளார்கள். ஒருபோதும் தமது இந்த அன்றாட வழக்கத்திலிருந்து அன்னார் விலகியதை நாங்கள் கண்டதில்லை. அன்னார் எல்லாவற்றையும் மிகுந்த உழைப்புடனும், ஆர்வத்துடனும் செய்து வந்தார்கள். அன்னாரின் இறை வணக்கங்களும் மிகுந்த உழைப்புடனும், ஆர்வத்துடனும் அமைந்திருந்தன.

கூறுகின்றார்கள்: அத்துடன் அன்னார் உலகியல் பணிகளையும் எவ்வாறு நிறைவேற்றி வந்தார்கள்? என்று எனக்கு மிகவும் வியப்பு ஏற்பட்டு வந்தது. கணவர் வீட்டாரின் உரிமைகள், அண்டை அயலாரின் உரிமைகள், எனது தந்தையாரை கருத்தில் கொள்வது, எங்கள் அனைவருடைய உணவுகளில் அக்கறை கொள்வது, மேலும் விருந்து உபசரிப்பிலும் எல்லையற்ற ஆர்வம் கொண்டிருந்தது என அன்னாரின் இந்த அனைத்து விஷயங்களும் மிகவும் வியக்கத்தக்கதாக இருந்தன. ஜமாஅத்துடன் நேசம் கொள்வது, அன்னாரின் வாழ்வில் வந்த கலீஃபாக்கள் அனைவருடனும் அன்னார் மிகவும் களங்கமற்ற தொடர்பு கொண்டிருந்தார்கள். கிலாஃபத்தின் மீது நன்றியுணர்வு கொண்ட பெண்மணியாக அன்னார் இருந்தார்கள். வஸிய்யத்தைக் குறித்து எப்போதும் கவலைப்பட்டு கொண்டிருந்தார்கள். காலத்தின் கலீஃபாவிற்கு கடிதம் எழுதுவதற்கு எப்போதும் அறிவுறுத்தி வந்தார்கள். கடிதம் எழுதுவதன் மூலம் தமக்கு நிம்மதி கிடைத்து வந்ததாக கூறிவந்தார்கள்.

எனக்கும் அன்னார் தொடர்ந்து கடிதம் எழுதி வந்தார்கள். இன்னும் கூறப்போனால் ஒவ்வொரு குத்பாவிற்கு பிறகும் அன்னாரின் கடிதங்கள் கிடைத்து வந்தன. மேலும், அதில் பல்வேறு வகையான கருத்துகளும் இடம் பெற்றிருந்தன. அன்னாருக்கு பிடித்திருந்த சில விஷயங்களை குறிப்பாக அவற்றில் குறிப்பிட்டு வந்தார்கள்.

ஒருபோதும் அன்னார் ஆட்சேபனைக்குரிய எந்த விஷயத்தையும் பேசியதில்லை. இன்னும் கூறப்போனால், நாங்கள் பங்குபெற்ற அதுபோன்ற சில விஷயங்கள் எப்போதாவது இருந்தாலும் கூட, ஆட்சேபனைக்குரிய விஷயங்களில் பங்கு பெற வேண்டிய எந்த அவசியமும் இல்லை. நான் எப்போதும் அந்த விஷயங்களில் பாதிப்பையே பார்த்துள்ளேன். ஒருபோதும் பயனுள்ளதாக கண்டதில்லை என்று அன்னார் கூறிவந்துள்ளார்கள்.

நான் கூறியதுபோன்று கிலாஃபத்துடன் அசாதாரண தொடர்பு இருந்தது. மிகவும் அதிகமாக ஏழைகளை பராமரிக்கக்கூடியவராக அன்னார் இருந்தார்கள். அக்தர் சாஹிப் என்ற ஒருவர் இருக்கின்றார்கள். அன்னார் எனக்கு எழுதியுள்ளார்கள்: எங்களது தந்தையார் எங்களது தாயாரையும், எங்களையும் விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள். அன்னார் (மர்ஹூமா) தமது வீட்டில் எங்களுக்கு இடமளித்தார்கள். மேலும் தமது பிள்ளைகளைப் போன்று எங்களை கருத்தில் கொண்டார்கள். உணவு, உடை, கல்வி, எல்லா விஷயங்களிலும் எங்களை கருத்தில் கொண்டார்கள். எப்போதும் எங்களுக்கு ஆதரவாக இருந்து வந்தார்கள்.

அல்லாஹ் அன்னாருடன் எப்போதும் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் சான்றோர்களின் பாதங்களில் அவர்களுக்கு இடமளிப்பானாக. மேலும், அன்னாரின் பிள்ளைகளுக்கும் அனனாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக. (ஆமீன்)

தமிழாக்கம் :

மவ்லவி **A.** அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவ மிக்க அந்தஸ்து கொண்ட கலீஃபா ராஷித் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களைக் குறித்த ஈமானை வலுவூட்டும் நற்குறிப்புகள்**

**அபூபக்ர் பின் அபீ கஹாஃபா அவர்களை விட தமது உயிராலும், செல்வத்தாலும் என்னுடன் நல்ல முறையில் நடந்து கொண்டவர் மக்களில் வேறு எவரும் இல்லை (நபி மொழி)**

**அறியாமை காலகட்டத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களில் குரைஷியர்களின் தலைவராகவும், அவர்களின் கண்ணியமும், மரியாதையும் மிக்க மக்களைச் சார்ந்தவராக கணக்கிடப்பட்டு வந்தார்கள்**

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஏழைகள் மற்றும் வறியவர்கள் மீது எல்லையற்ற பரிவு கொண்டவராக இருந்தார்கள். குளிர்காலங்களில் கம்பளிப் போர்வைகளை விலைக்கு வாங்கி அவற்றை தேவையுடையவர்களுக்கு வழங்கி வந்தார்கள்.**

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கிலாஃபத்தின் மூலமாக தனிப்பட்ட எந்த பயனும் அடையவில்லை. மாறாக படைப்பினங்களுக்கு சேவை செய்வதையே பெருமிதமாகக் கருதி வந்தார்கள்.**

**எவ்வாறு பைத்துல் முகத்தஸ் பயணத்தின் போது ஜிப்ரீல் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தார்களோ அதுபோன்று ஹிஜ்ரத்தின்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னார் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள்.மேலும் எவ்வாறு ஜிப்ரீல் அல்லாஹ்விற்கு கட்டுப்பட்டு செயல்படுகின்றாரோ அதுபோன்று அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கீழ் செயல்பட்டு வந்தார்கள்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள பள்ளிவாசலில் 25 நவம்பர் 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு நுபுவ்வத் மாதம் **25ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ○ الرَّحْمٰنِ الرَّحِيمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّينِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ○
صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّينَ ○

ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய குறிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த வகையில், அன்னாருடைய படைப்பினச் சேவை மற்றும் ஏழைகளுக்கு உணவு அளிப்பது போன்றவற்றைக் குறித்து குறிப்பு கிடைக்கின்றது. இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கு முன்னரே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) குரைஷிகளில் சிறந்த மக்களைச் சேர்ந்தவர்களாக கணக்கிடப்பட்டு வந்தார்கள். மக்களுக்கு ஏற்பட்டு வந்த கஷ்டங்களில் அன்னாரிடம் இருந்து உதவி பெற்று வந்தனர். மக்காவில் பெரும்பாலும் விருந்து உபசரிப்பு செய்து வந்தார்கள். மேலும், பெரும் பெரும் விருந்துகளை அளித்து வந்தார்கள்.

(அஸ்ஸீரத்துல் ஹல்பியா தொகுதி 1, பக்கம் 390, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்-2002)

அறியாமைக் காலகட்டத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் குரைஷியர்களின் தலைவர்களில் ஒருவராகவும், அவர்களில் கண்ணியமும், மரியாதையும் மிகுந்த மக்களைச் சேர்ந்தவராகவும் கணக்கிடப்பட்டு வந்தார்கள். மக்கள் பிரச்சனைகளையும், விவகாரங்களையும் எடுத்துக் கொண்டு அன்னாரிடம் வந்து சென்றார்கள். மக்காவில் விருந்து உபசரிப்பில் அன்னார் தனித்தன்மை மிக்கவராக இருந்தார்கள்.

(முஹம்மது அஸ்ஸலாபி மொழிபெயர்ப்பு செய்த நூல்-ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் வாழ்க்கையும், சாதனைகளும், பக்கம் 52-54, தாரே இப்னு கஸீர் பெய்ரூத்-2003)

அடுத்து எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஏழைகள் மற்றும் வழிப்போக்கர்கள் மீது மிகவும் பரிவு கொண்டவராக திகழ்ந்தார்கள். குளிர்காலங்களில் கம்பளிகளை விலைக்கு வாங்கி அவற்றை தேவையுடையவர்களுக்கு வழங்கிவிடுவார்கள். (ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் தீர்ப்புகள் எனும் நூல், பக்கம் 378- முஷ்தாக் புக் கார்னர் லாஹூர்)

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு வருடம் வெப்பமான தடித்த போர்வைகளை வாங்கினார்கள். அதாவது கிராமப்புறத்திலிருந்து கொண்டு வரப்படும் கம்பளியை வாங்கினார்கள். மேலும் குளிர் காலங்களில் மதீனாவின் விதவைப் பெண்களுக்கு அந்தப் போர்வைகளை வழங்கிவிடுவார்கள். (கன்ஸுல் உம்மால், தொகுதி 3, பாகம் 5. பக்கம் 245, கிலாஃபத் எனும் நூல், ஹதீஸ் எண்: 14076, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2004)

ஓர் அறிவிப்பில் வருகிறது. கிலாஃபத் அரியணையில் அமர்வதற்கு முன்னர் அன்னார் (ரலி) ஓர் ஆதரவற்ற அனாதை குடும்பத்தினுடைய ஆடுகளின் பாலை கறந்து கொடுத்து வந்தார்கள். அன்னார் (ரலி) கலீஃபாவாக ஆகிவிட்ட பிறகு, இனி தாங்கள் ஆடுகளிடம் பால் கறக்க மாட்டீர்கள் என்று அந்தக் குடும்பத்தினுடைய ஒரு சிறுமி கூறினாள். அதை செவிமடுத்த ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) கூறினார்கள்: நான் ஏன் செய்ய மாட்டேன்? எனது உயிரின் மீது ஆணையாக! நான் உங்களுடைய ஆட்டின் பாலை நிச்சயம் கறந்து கொடுப்போன். நான் எந்த விஷயத்தை மேற்கொண்டுள்ளேனோ அது நான் நிலைபெற்றிருந்த எனது பழக்கத்திலிருந்து என்னை தடுக்காது என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

ஆக, அன்னார் வழக்கம்போல் அவர்களுடைய ஆடுகளின் பாலை கறந்து கொடுத்து வந்தார்கள். அந்த சிறுமிகள் தங்களது ஆடுகளை அழைத்துக் கொண்டு வந்தபோது நான் பால் நுரையை உருவாக்கவா? வேண்டாமா என அன்னார் (ரலி) பரிவுகூர்ந்து கேட்பார்கள். பாலில் நுரையை உருவாக்குங்கள் என்று அந்த சிறுமிகள் கூறினால் பாத்திரத்தை சற்று தொலைவில் வைத்து அதில் பாலைக் கறப்பார்கள். எந்த அளவுக்கு என்றால், (பாத்திரத்தில்) அதிகமான நுரை உருவாகிவிடும். அந்த சிறுமிகள் பாத்திரத்தில் நுரையை உருவாக்க வேண்டாம் என்று கூறினால், அன்னார் பால் கறக்கும்போது பாத்திரத்தை அருகில் வைத்துக் கொண்டு பால் கறப்பார்கள். எந்த அளவுக்கு என்றால், பாலில் நுரை உருவாகாது. அன்னார் தொடர்ந்து ஆறு மாதங்கள் வரை இந்த சேவையை செய்து வந்தார்கள். அதாவது கிலாஃபத்தில் அமர்ந்த பிறகு ஆறுமாதம் வரை இவ்வாறு சேவை செய்து வந்தார்கள். பின்னர் அன்னார் (ரலி) அவர்கள் மதீனாவில் வசிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இரண்டு வீடுகள் இருந்தன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஒரு வீடு வெளியில் இருந்தது. அங்கு வெளியில் தங்கி வந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜித் நபவிக்கு அருகில் தமது வீடுகளுக்கு அருகிலும் அன்னாருக்கு ஒரு வீடு வழங்கியிருந்தார்கள். அங்கும் அன்னார் வீடு கட்டியிருந்தார்கள். அதைத் தவிர மற்றொரு வீடும் இருந்தது. மதீனாவிலும் இரண்டு வீடுகள் இருந்தன. ஆனால் முதலில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்வில் புறநகர் பகுதியில் இருந்த வீட்டில் அங்கேயே அதிகநேரம் வசித்து வந்தார்கள். கலீஃபா ஆன பிறகு பின்னர் மீண்டும் மதீனாவிற்கு இடம் பெயர்ந்துவிட்டார்கள். மதீனாவிற்கு வரும் வரை தமது பொறுப்பில் எடுத்திருந்த அந்த சிறுமிகளுக்கான வேலையை தொடர்ந்து நிறைவேற்றி கொண்டிருந்தார்கள். (துப்காதுல் குப்ரா தொகுதி 3, பக்கம் 138-139, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்-1990)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவின் மூலையில் வசிக்கக்கூடிய ஒரு வயதான மற்றும் கண்பார்வையற்ற பெண்ணிற்கு சேவை செய்து வந்தார்கள். அன்னார் (ரலி) அந்த பெண்மணிக்காக தண்ணீர் கொண்டு செல்வார்கள். மேலும் அவருடைய வேலையை அவருக்கு செய்து கொடுத்து வந்தார்கள். ஒருமுறை அன்னார் (ரலி) அவரது வீட்டிற்கு சென்றார்கள். அப்போது, அன்னாருக்கு முன்னதாகவே யாரோ ஒருவர் வந்துள்ளார். மேலும் அந்த நபர் அந்த வயதான பெண்மணியின் பணியை செய்து கொடுத்துள்ளார் என்று அன்னாருக்கு தெரிய வந்தது. அடுத்த முறை, அந்த நபர் முன்னதாக வந்துவிடக் கூடாது என்பதற்காக அன்னார் (ரலி) அந்த வயதான பெண்மணியின் வீட்டிற்கு விரைவாக சென்றுவிட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அமைதியாக உட்கார்ந்து கொண்டார்கள். அப்போது, அந்த வயதான பெண்மணியின் வீட்டிற்கு வந்து கொண்டிருந்த நபர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆவார்கள் என்பதை அன்னார் கண்டு கொண்டார்கள். அந்தநேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)அவர்கள் கலீஃபாவாக இருந்தார்கள்.

அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! இது தாங்களாகவே இருந்திருக்க முடியும். (ஜலாலுத்தீன் அஸ்ஸுயூதி அவர்களின் நூல் தாரீகுல் குலஃபா-அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் வாழ்க்கை- பக்கம் 64, பெய்ரூத் வெளியீடு, பதிப்பு-1999)

அதாவது, அந்த நன்மையில் முன்னேறக்கூடியவர் அன்னாராகவே இருந்திருக்க முடியும்.

ஓர் அறிவிப்பில் மூஸா பின் இஸ்மாயீல் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: முஃதமிர் தமது தந்தையிடமிருந்து அறிவிப்பு செய்துள்ளார். மேலும் கூறினார்: அபூ உஸ்மான் எங்களிடம் கூறினார்: ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபீ பக்ர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள்

தம்மிடம் இவ்வாறு கூறினார்கள்: திண்ணைத் தோழர்கள் ஏழை மக்களாக இருந்தனர். ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவரிடம் இரு நபர்களுக்கான உணவு இருக்குமோ அவர் மூன்றாவதாக ஒருவரை அழைத்துச் செல்லவும். எவரிடம் நான்கு நபர்களுக்கான உணவு இருக்குமோ அவர் ஐந்தாவதாக ஒருவரை அழைத்துச் செல்லவும் அல்லது ஆறாவது நபரை என்றோ அல்லது அதுபோன்ற சில சொற்களையோ கூறினார்கள். அதாவது அங்கு அமர்ந்திருந்த அந்த ஏழைகளை மக்கள் தமது வீடுகளுக்கு அழைத்துச் செல்லவும். மேலும் அவர்களுக்கு உணவு அளிக்கவும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மூன்று நபர்களை அழைத்துச் சென்றார்கள். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பத்து நபர்களை அழைத்துச் சென்றுவிட்டார்கள். மேலும் வீட்டில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் மேலும் மூன்று நபர்களும் இருந்தனர். நானும், எனது தந்தையும், எனது தாயும் இருந்தோம் என்று ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் கூறிவந்தார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அப்துர் ரஹ்மான் அவர்கள் இவ்வாறும் கூறினார்களா? என்பதை நான் அறியேன். அதாவது எங்களது வீடும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீடும் ஒன்றாக இருந்தது. எனவே எனது மனைவியும், எனது வேலைக்காரரும் இருந்தோம் என்று அன்னார் கூறினார்களா? என்பதை நான் அறியேன்.

இவ்வாறு நிகழ்ந்தது. அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வீட்டில் இரவு உணவு உண்டார்கள். பின்னர் அங்கேயே தங்கியிருந்தார்கள். எந்த அளவிற்கு என்றால், இஷா தொழுகையை தொழுதார்கள். பின்னர் திரும்பி வந்துவிட்டார்கள். விருந்தினர்களை வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள்.

ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் தங்கியிருந்தார்கள். மேலும் அங்கேயே உணவு உண்டார்கள். பின்னர் திரும்பி வந்துவிட்டார்கள். அறிவிக்கின்றார்கள்:

அங்கு அன்னார் எவ்வளவு நேரம் தங்கியிருந்தார்கள் என்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இரவு உணவை அருந்தினார்கள். மேலும், அல்லாஹ் விரும்பிய அளவு அங்கு இரவைக் கழித்த பிறகு சென்றார்கள். எந்த விஷயம் தங்களை தங்களின் விருந்தினர்களிடமிருந்து விலக்கி வைத்தது என்றோ அல்லது விருந்தினர்களிடமிருந்து விலக்கி வைத்தது? என்றோ அன்னாரின் மனைவிக் கேட்டார்கள். அதாவது தாங்கள் ஏன் காலதாமதம் செய்தீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், நீங்கள் அவர்களுக்கு உணவு அளிக்கவில்லையா? என்று கேட்டார்கள். தாங்கள் வரும் வரை உணவு உண்பதை அவர்கள் மறுத்துவிட்டார்கள் என்று அன்னார் கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வரும் வரை நாங்கள் உணவு உண்ண மாட்டோம் என்று விருந்தினர்கள் கூறிவிட்டனர். அன்னார் உணவை எடுத்து வைத்துவிட்டார்கள். அன்னாரின் துணைவியார் கூறினார்கள்: நான் அவர்களுக்கான உணவை எடுத்து வைத்துவிட்டேன். ஆனால், விருந்தினர்கள் அந்த உணவை அருந்தவில்லை. ஏன் விருந்தினர்களுக்கு உணவு வழங்கவில்லை? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னை ஏசிபேசிவிடக்கூடாது என்பதற்காக நான் சென்று மறைந்து கொண்டேன் என்று ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் கூறிவந்தார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முட்டாளே! என்று கூறினார்கள். மேலும் பெரிய சோம்பேறி என்றும் என்னை கூறினார்கள்.

அன்னாரின் மகன் அப்துர் ரஹ்மான் (ரலி) கூறுகின்றார்கள்:

உணவு அருந்துங்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் விருந்தினர்களிடம் கூறினார்கள். மேலும், நான் ஒருபோதும் உணவு உண்ண மாட்டேன் என்று சுயமே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சத்தியம் செய்துவிட்டார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் கூறிவந்தார்கள்:

அல்லாஹ்வின் மீது ஆணையாக ! நாங்கள் எந்த கவளத்தை எடுத்தாலும் அதன் அடியிலிருந்து அதை விட அதிகமான உணவு அதிகரித்து வந்தது. விருந்தினர்கள் திருப்தி கொள்ளும் அளவில் உணவு அருந்தினர். மேலும், உணவு முதலில் எவ்வளவு இருந்ததோ அதை விட அதிகரித்து விட்டது.

விருந்தினர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. விருந்தினர்கள் உணவு அருந்திக் கொண்டே சென்றனர். ஆனால் கூறுகின்றார்கள்: உணவு அப்படியே இருந்தது.இன்னும் கூறப்போனால், உணவு அதிகரித்துக் கொண்டே சென்றது. மேலும் அனைவரும் வயிறு நிறைய உணவு உண்டனர். உணவு அப்படியே இருந்தது. இன்னும் கூறப்போனால், இருந்ததை விட அதிகமாகிவிட்டது என்பதை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கண்டபோது, அன்னார் (ரலி) தமது மனைவியிடம், பனீ ஃபிராஸின் சகோதரியே! இது என்ன? என்று கேட்டார்கள். அன்னாரின் துணைவியார், எனது கண்களின் குளிர்ச்சியின் மீது ஆணையாக! இது தற்போது ஏற்கனவே இருந்ததைவிட மூன்று மடங்கு அதிகமாகிவிட்டதே! என்று கூறினார்கள். அதாவது உணவு அந்த அளவிற்கு அதிகமாகிவிட்டது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அதிலிருந்து உணவு அருந்தினார்கள். மேலும், அவன் ஷய்த்தானாக மட்டும் இருந்தான் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அதாவது, அவனது தூண்டுதலால் நான் உணவு உண்ண மாட்டேன் என சத்தியம் செய்துவிட்டேன் என்று கூறினார்கள்.

சத்தியமாக! நான் உணவு உண்ண மாட்டேன் என்று அன்னார் முதலில் கூறியிருந்தார்கள் அல்லவா? ஆனால் உணவில் பரக்கத் ஏற்பட்டுக் கொண்டிருந்ததை அன்னார் (ரலி) கண்டபோது, எனது ஷய்த்தான் என்னை அவ்வாறு கூற வைத்துவிட்டான். ஆனால், இது அருளுக்குரிய உணவு ஆகும். எனவே இதிலிருந்தும் நான் உணவு அருந்துவேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். பின்னர், அதிலிருந்து ஒரு கவளம் உணவை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அருந்தினார்கள். அதன் பிறகு உணவை எடுத்துக் கொண்டு அன்னார் (ரலி) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்று விட்டார்கள். மேலும் அந்த உணவு காலை வரை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இருந்தது. உணவு அங்கு காலை வரை இருந்தது. கூறுகின்றார்கள்: எங்களுக்கும் ஒரு சமுதாயத்திற்கும் மத்தியில் ஓர் உடன்படிக்கை இருந்தது. மேலும் அதற்குரிய காலம் முடிவடைந்திருந்தது. நாங்கள் 12 நபர்களை தனித்தனியாக அமர வைத்தோம். அவர்களில் ஒவ்வொரு நபருடனும் சில மக்கள் இருந்தனர். அல்லாஹ் நன்கறிவான். அதாவது, உடன்படிக்கை செய்தவர்கள் 12 நபர்களாக இருந்தார்களா? மேலும் அவர்களுடன் சில மக்களும் இருந்தனரா? என்பதை அல்லாஹ் நன்கறிவான்.

கூறுகின்றார்கள்: ஒவ்வொரு நபருடனும் எத்தனை நபர்கள் இருந்தனர்? என்பதை அல்லாஹ் நன்கறிவான். ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த நபர்களை மக்களுடன் அனுப்பினார்கள் என்பது மட்டும் உறுதியானதாகும். அதாவது குறிப்பிடத்தகுந்த எண்ணிக்கை இருந்தது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் கூறிவந்தார்கள்: ஆக, அவர்கள் அனைவரும் அந்த உணவிலிருந்து உணவு உண்டனர் அல்லது அநேகமாக அவ்வாறே கூறினார்கள். ஆக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உணவிலும் ஒருமுறை அல்லாஹ் பரக்கத் வழங்கிவிட்டான். (ஸஹீஹ் புகாரி, கிதாபுல் மனாகிப், ஹதீஸ் எண்: 3581)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபீ பக்ர் (ரலி) அறிவிக்கின்றார்கள்.

இன்று ஓர் ஏழைக்கு உணவளித்தவர் உங்களில் யாராவது ஒருவர் இருக்கின்றாரா? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அப்போது, நான் மஸ்ஜிதில் நுழைந்தபோது ஒரு யாசிப்பவர் யாசித்தார். நான் அப்துர் ரஹ்மானின் கையில் ஒரு ரொட்டித் துண்டை பார்த்தேன். நான் அவரிடமிருந்து வாங்கிக் கொண்டேன். மேலும், நான் அதனை அந்த யாசிப்பவருக்கு கொடுத்துவிட்டேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். (சுனன் அபீ தாவூத், பாடம் ஸகாத், ஹதீஸ் எண்: 1670) இவ்வாறு யாசிப்பவர் யாசித்தார். எனது மகனின் கையில் ரொட்டி இருந்தது. எனவே நான் அவரிடமிருந்து வாங்கி பின்னர் அதனை அந்த யாசிப்பவருக்கு கொடுத்துவிட்டேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மகன் அப்துர் ரஹ்மானும் கிலாஃபத்திற்கு தகுதியுடைய நபராக இருந்தார். அன்னாருடைய இயல்பு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடமிருந்து மென்மையானதாக இருந்தது. திறமைகளும் அன்னாரிடமிருந்து குறைவானதாக இருக்கவில்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு பிறகு அவர் கலீஃபா ஆக வேண்டும் என்று மக்களும் கூறினர். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இயல்புகளில் கருத்துவேறுபாடுகள் இருந்தபோதிலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கிலாஃபத்திற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களையே தேர்ந்தெடுத்தெடுத்தார்கள். எனவே, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கிலாஃபத்திலிருந்து தனிப்பட்ட பயன் எதுவும் அடையவில்லை. இன்னும் கூறப்போனால், அன்னார் படைப்பின சேவையை பெருமிதமாக கருதி வந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

வலிமார்களின் ஓர் அறிவிப்பு வருகிறது. (இந்த அறிவிப்பு எந்த அளவிற்கு சரியானது என்பதை அல்லாஹ்வே நன்கறிவான்)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணத்திற்கு பிறகு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஓர் அடிமையிடம், உம்முடைய எஜமானர் என்னென்ன நல்ல பணிகளை செய்து வந்தார்கள் என்று எனக்கு கூறுங்கள். அப்போதுதான் என்னால் அந்த பணியை செய்ய முடியும் என கூறினார்கள். ஏராளமான அன்னாரின் நன்மையான பணிகளிலிருந்து அந்த அடிமை இந்த பணியைக் கூறினார்:

அதாவது, தினமும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ரொட்டியை, உணவை எடுத்துக் கொண்டு இன்ன நபரிடத்தில் செல்வார்கள்.மேலும் என்னை ஓரிடத்தில் நிற்கச் செய்துவிட்டு அன்னார் முன்னால் சென்றுவிடுவார்கள். அன்னார் (ரலி) என்ன நோக்கத்திற்காக அங்கு சென்றார்கள் என்பதை என்னால் கூறமுடியாது என்று அந்த அடிமைக் கூறினார்.

ஆக, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த அடிமையை தன்னுடன் அழைத்துக் கொண்டு அந்த அடிமைக் குறிப்பிட்ட இடத்திற்கு உணவை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டார்கள். முன்னால் சென்று அன்னார் (ரலி) கண்ட விஷயம் என்னவென்றால், அங்கு ஊனமுற்ற, கண் பார்வையற்ற நபர் ஒருவர் அமர்ந்திருந்தார். மேலும் அவருக்கு கை,கால்கள் இல்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த மாற்றுத் திறனாளியின் வாயில் ஒரு கவளத்தை ஊட்டினார்கள். அப்போது அவர் அழத் தொடங்கிவிட்டார். மேலும், அல்லாஹ் அபூபக்ர் (ரலி) மீது கருணை செய்வானாக! அவர் எவ்வளவு நல்ல மனிதராக இருந்தார்! என்று அவர் கூறினார்.

அப்போது, பாபா! அபூபக்ர் (ரலி) மரணித்துவிட்டார்கள் என்று உமக்கு எப்படி தெரியும்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, எனது வாயில் பற்கள் கிடையாது. எனவே அபூபக்ர் (ரலி) உணவு கவளத்தை நன்றாக மென்று எனது வாயில் ஊட்டுவார்கள். இன்று எனது வாயில் கடினமான கவளம் வந்ததால் இந்த கவளத்தை எனக்கு ஊட்டக்கூடியவர் அபூபக்ர் அல்ல. மாறாக வேறு

ஒருவர் ஆவார் என்பதை நான் புரிந்து கொண்டேன். அதுமட்டுமல்ல அபூபக்ர் (ரலி) ஒருபோதும் இங்கு வருவதில் இடைவெளியும் விட்டதில்லை. தற்போது ஏற்பட்ட தொய்விலிருந்து அவர் நிச்சயமாக உலகில் இல்லை என்பதையும் நான் புரிந்து கொண்டேன் என்று அவர் கூறினார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அரசாட்சியிலிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பெற்றுக் கொண்ட அந்த விஷயம் என்பது என்ன? கிலாஃபத் அல்லது மன்னராட்சி அன்னாருக்கு கிடைத்தவற்றிலிருந்து, அன்னார் எந்த தனிப்பட்ட பயனையும் அடையவில்லை. அன்னார் அரசாங்க செல்வத்தை தமதாக்கிக் கொண்டார்களா? அன்னார் அரசாங்க சொத்துகளை தமது செல்வமாக ஆக்கிக் கொண்டார்களா? ஒருபோதும் இல்லை! அன்னாரின் உறவினர்களுக்கு கிடைத்த பொருட்கள் அன்னாருக்கு சொந்தமான சொத்துகளிலிருந்து கிடைத்தவை ஆகும்.

(குத்பாதே மஹ்மூத், தொகுதி 17, பக்கம் 494-495)

அன்னாருக்கு ஒரு தனித்தன்மை இருந்தது. அது என்னவென்றால் அன்னார் ஆற்றிய தொண்டுகள் ஆகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஷரீஅத்திற்கு ஹக்குல்லாஹ் மற்றும் ஹக்குல் இபாத் என்ற இரண்டு அம்சங்கள் உள்ளன. இவை இரண்டு விஷயங்கள் ஆகும். அது அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய கடமைகள் மற்றும் அடியார்களுக்கு செலுத்த வேண்டிய கடமைகள் என்பதாகும். கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை பாருங்கள்! அன்னார் எந்த அளவிற்கு தொண்டாற்றுவதில் வாழ்வைக் கழித்துள்ளார்கள்! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நிலைமையை பாருங்கள்! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு மூதாட்டிக்கு நிரந்தரமாக அல்வா கொடுப்பதை தனது வழக்கமாக ஆக்கி வைத்திருந்தார்கள். இது எந்த அளவிற்கான ஏற்பாடாக இருந்தது என்பதை சிந்தித்துப் பாருங்கள். அன்னார் (ரலி) மரணமடைந்துவிட்டார்கள். அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மரணமடைந்துவிட்டார்கள். அப்போது, அந்த மூதாட்டி, இன்று அபூபக்ர்(ரலி) மரணமடைந்துவிட்டார் என்று கூறினார். அதற்கு, உமக்கு என்ன இல்ஹாம் அல்லது வஹீ வந்துள்ளதா? என்று அவருடைய அண்டை வீட்டார்கள் கேட்டனர். அதற்கு, இல்லை இன்று அல்வா வரவில்லை. இதிலிருந்து அபூபக்ர் (ரலி) மரணமடைந்துவிட்டார் என்று நான் அறிந்து கொண்டேன் என்று அவர் கூறினார். அதாவது, அன்னார் உயிருடன் இருந்திருந்தால் எந்த நிலையிலும் அல்வா வராமல் இருப்பது சாத்தியமற்றதாகும். பாருங்கள்! அது எப்படிப்பட்ட சேவையாக இருந்தது? அதுபோன்றே அனைவரும் சேவை செய்ய வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 6, பக்கம் 54- பதிப்பு 1984)

அன்னாரின் குறைகளை திரையிடுதல் பண்பைக் குறித்து அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறிவந்தார்கள். அதாவது, நான் ஒரு திருடனை பிடித்தால் இறைவன் அவரது குற்றத்தின் மீது திரையிட வேண்டும் என்பதே எனது மிகப் பெரிய ஆசையாக இருந்தது. (அத்தப்காதுல் குப்ரா, தொகுதி 5, பக்கம் 9, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012)

அன்னாரின் துணிவு மற்றும் வீரத்தைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வீரம் மற்றும் துணிவின் உருவமாக இருந்தார்கள். பெரும் பெரும் அபாயங்களை இஸ்லாத்திற்காகவும் அல்லது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீதான அன்பு மற்றும் நேசத்திற்காகவும் பொருட்படுத்தியதே கிடையாது. மக்கா வாழ்க்கையில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஏதாவது ஆபத்து அல்லது துன்பம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பத்தை அன்னார் (ரலி) கண்டால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பாதுகாப்பு மற்றும் உதவிக்காக அன்னார் தடுப்புச் சுவராக மாறி முன்னால் நின்று வந்தார்கள். ஷூஅப் அபீ தாலிப் பள்ளத்தாக்கில் மூன்று வருடங்கள் வரை முற்றுகையிடப்பட்ட காலமாகவும், கைதியாக இருப்பதற்கான காலமாகவும் இருந்தபோது, உறுதியாகவும் உறுதிப்பாட்டுடனும் அன்னார் (ரலி) அங்கேயே தங்கியிருந்தார்கள். அடுத்து, ஹிஜ்ரத் சந்தர்ப்பத்தின்போது, அன்னாருக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தோழமையிலும், நட்பிலும் இருப்பதற்கான கண்ணியம் கிடைத்தது. அப்போது உள்ளபடியே உயிருக்கே ஆபத்து இருந்தது. எத்தனை போர்கள் நிகழ்ந்தனவோ அவற்றில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலந்து கொள்ள மட்டும் செய்யவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பாதுகாப்பிற்கான கடமைகளையும் அன்னார் (ரலி) அழகிய முறையில் நிறைவேற்றினார்கள். அன்னாருடைய இந்த துணிவு மற்றும் வீரத்தைக் கருத்தில் கொண்டவாறே ஒருமுறை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மக்களிடம் இவ்வாறு கேட்டார்கள். அதாவது மக்களே! மக்களில் மிகப் பெரிய வீரர் யார்? அதற்கு அமீருல் மூஃமினீன் அவர்களே! தாங்களே ஆவீர்கள் என்று மக்கள் கூறினர். எனது விஷயத்தை பொருத்தவரை என்னுடன் எவர் மோதினாரோ அவருக்குரிய நீதியை நான் வழங்கினேன். அதாவது நான் அவரைக் கொன்று வீழ்த்தினேன். ஆனால், மாபெரும் வீரர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆவார்கள் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்.

நாங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காக பத்ர்ப் போர் நாளன்று கூடாரம் அமைத்தோம். பின்னர், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை எந்த ஒரு இணைவைப்பவரும் வந்தடையாமல் இருக்க ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் யார் இருப்பார்? என்று நாங்கள் கேட்டோம். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அப்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அருகில் எவரும் செல்லவில்லை. ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது வாளை ஏந்திக் கொண்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அருகில் சென்று நின்றுவிட்டார்கள். அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வரை எந்த இணைவைப்பாளரும் சென்றடைய முடியாது. எனினும், அவர் முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் போரிட வேண்டும். எனவே அன்னார் அனைவரையும் விட துணிவு மிக்க வீரராக இருந்தார்கள்.

அதேபோன்று உஹதுப் போரில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஷஹீதாகிவிட்டதாக வதந்தி பரவியது. அப்போது எல்லாரையும் விட முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூட்டத்தை தாண்டியவாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை சென்றடைந்தார்கள். அந்தநேரத்தில் ஹுஸுர் (ஸல்) அவர்களுடன் 11 சஹாபிகள் மட்டுமே இருந்தனர் என்று கூறப்படுகிறது. அவர்களின் பெயர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் ஸஅத் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் ஸுபைர் (ரலி), ஹஸ்ரத் அபூதஜானா (ரலி) ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. உஹதுப் போரில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பாதுகாப்பிற்காக உயிரை அர்ப்பணிக்கக்கூடிய, குழியில் இருந்த சஹாபிகளில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஒருவராக இருந்தார்கள். அகழ்ப்போரில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இணைந்தே இருந்தார்கள். அகழ் தோண்டப்பட்ட நேரத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஆடைகளிலிருந்து மண்ணை எடுத்து அகற்றிய நபர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அடங்குவார்கள்.

ஹுதைபிய்யா உடன்படிக்கை சந்தர்ப்பத்தில் உயிரை அர்ப்பணிப்பதற்காக பைஅத் செய்யக்கூடிய நபர்களில் அன்னார் (ரலி) அவர்களும் ஒருவராக இருந்தார்கள் தான். அதேநேரம் உடன்படிக்கை எழுதப்பட்டபோது எந்த ஈமானிய துணிவு,உறுதிப்பாடு, கட்டுப்படுதல் மற்றும் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீதான நேசத்திற்கான முன்மாதிரியை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் காட்டினார்களோ அதனை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது வாழ்நாளின் பிற்பகுதியிலும் அதனை மறக்கவில்லை.

தாயிஃப் போரிலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். மேலும் அன்னாரின் மகன் அப்துல்லாஹ் பின் அபீபக்ர் (ரலி) அவர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அந்த இளம் மகன் ஷஹீதாகிவிட்டார். (ஸீரத் ஸய்யிதுனா ஸித்தீகே அக்பர் (ரலி) ஆசிரியர் அபூந் நஸ்ர் அவர்களின் உருது மொழியாக்க நூல், பக்கம்-354, 367, 369, 376, முஷ்தாக் புக் கார்னர் லாஹூர்) (மொழிபெயர்ப்பாளர் ஸலாபியின் ஸீரத் ஸய்யிதுனா ஸித்தீகே அக்பர் (ரலி) அவர்களின் வாழ்க்கையும், சாதனைகளும் என்ற நூல், பக்கம் 107, அல்ஃபுர்கான் டிரஸ்ட் கான் கட், பாகிஸ்தான்)

அடுத்து, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் முப்பதாயிரம் படையினரை அழைத்துக் கொண்டு தபூக் போருக்காக புறப்பட்டபோது ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் பல்வேறு படைத் தளபதிகளை நியமித்தார்கள். மேலும் அவர்களிடம் கொடிகளை வழங்கினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் மிகப் பெரிய கொடியை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வழங்கினார்கள். (ஸீரத் ஸய்யிதுனா ஸித்தீகே அக்பர், ஆசிரியர் அபூ அந்நஸ்ர் அவர்களின் உருது மொழிபெயர்ப்பு, பக்கம்-381, முஷ்தாக் புக்கார்னர் லாஹூர்)

ஹஸ்ரத் ஸலமா பின் அக்வஃ அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஏழு போர்களில் கலந்து கொண்டேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்த போர்திட்டங்களில் ஒன்பது போர் திட்டங்களில் எனக்கு பங்குபெறுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. அவற்றில் சிலநேரம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எங்களுக்கு தலைமை வகித்தார்கள். சிலநேரம் ஹஸ்ரத் ஒசாமா பின் ஸைது (ரலி) அவர்கள் தலைமை வகித்தார்கள். (ஸீரத் ஸய்யிதுனா ஸித்தீகே அக்பர், ஆசிரியர் அபூஅந்நஸ்ர் அவர்களின் உருது மொழியாக்க நூல், பக்கம் 356)

மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்கு பிறகு முழு அரேபியாவுமே முர்தத்த ஆகிவிட்டது போன்ற சூழல் உருவானபோது அந்த நிலைமைகளில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எந்த தீரம் மற்றும் துணிவை செயல் ரீதியாக வெளிப்படுத்தினார்களோ அதற்கு நிகர் அன்னாரே ஆவார்கள். அதன் விளக்கமான நற்குறிப்பு முன்னரே நடைபெற்றுவிட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒருமுறை நிராகரிப்பாளர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கழுத்தில் துணியைப்போட்டு வேகமாக அழுத்தத் தொடங்கினர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இந்த விஷயம் தெரிய வந்தபோது அன்னார் (ரலி) ஓடோடி சென்றார்கள். மேலும் அன்னார் (ரலி) அந்த நிராகரிப்பாளர்களை அங்கிருந்து அகற்றிவிட்டார்கள். மேலும் கூறினார்கள்: உங்களுக்கு இறையச்சம் இல்லையா? எனது இறைவன் அல்லாஹ் என்று ஒருவர் கூறுவதன் காரணமாக நீங்கள் அவரை அடித்து துன்புறுத்துகின்றீர்களா? அவர் உங்களிடத்தில் உந்த செல்வத்தையும் கேட்கவில்லையே. அவ்வாறிருக்க நீங்கள் அவரை ஏன் அடிக்கின்றீர்கள்?

ஸஹாபி (ரலி) கூறுகின்றார்கள்: நாங்கள் எங்களது காலத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை மாபெரும் வீரராக கருதி வந்தோம். ஏனென்றால், இறைத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களை கொன்றுவிட்டால் இஸ்லாம் அழிந்துவிடும் என்பதை எதிரி அறிந்திருந்தான். எனவே அன்னார் (ஸல்) மீது ஒருவன் தாக்குதல் நடத்தினால் அவனுக்கு முன்னால் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நிற்க வேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்

ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு அருகில் எப்போதும் நின்று கொண்டிருந்தார்கள். ஆக, பத்ர் சந்தர்ப்பத்தின்போது நிராகரிப்பாளர்களுடன் மோதல் நிகழ்ந்தது. அப்போது ஸஹாபிகள் தங்களுக்குள் ஆலோசனை செய்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காக ஒரு கூடாரத்தை அமைத்தார்கள். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் இந்த கூடாரத்தில் ஓய்வு எடுங்கள். மேலும் நமது வெற்றிக்காக துஆ செய்யுங்கள். மேலும் நாங்கள் எதிரிகளுடன் சுயமே போரிடுவோம் என்று ஸஹாபிகள் கூறினர். பின்னர் இறைத் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் உங்களுக்கு உறுதியளிக்கின்றோம். அதாவது எங்களிடமும் களங்கமற்றத் தன்மை காணப்படுகிறது. எனினும், மதீனாவில் அமர்ந்திருக்கின்ற மக்கள் எங்களைக் காட்டிலும் அதிக தூயவர்களாகவும், நம்பிக்கைக்குரியவர்களாகவும் உள்ளனர். நிராகரிப்பாளர்களுடன் போர் நடைபெற உள்ளது என்று அவர்கள் அறிந்திருக்கவில்லை. அவ்வாறு அறிந்திருந்தால் அவர்களும் நிச்சயம் இந்தப் போரில் கலந்து கொண்டிருப்பார்கள்.

பத்ர் போர் குறித்து முன்னரே முறையாக அவர்கள் அறிந்திருக்கவில்லை. அவர்கள் அறிந்திருந்தால் கலந்து கொண்டிருப்பார்கள்.

இறைத் தூதர் (ஸல்) அவர்களே! ஒருவேளை இந்தப் போரில் நமக்கு தோல்வி ஏற்பட்டுவிட்டால், நாங்கள் ஒரு வேகமாக ஓடக் கூடிய ஒட்டகத்தை தங்களுக்கு அருகில் கட்டி வைத்திருக்கின்றோம். மேலும் அபூபக்ர் (ரலி) அவர்களை தங்களுக்கு அருகில் நிறுத்திவிட்டோம். அன்னாரை விட பெரிய வீரரும், துணிவு மிக்கவரும் எங்களிடத்தில் எவரும் தென்படவில்லை. இறைத் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் உடனடியாக அபூபக்ர் (ரலி) அவர்களுடன் அந்த ஒட்டகத்தில் அமர்ந்து மதீனாவிற்கு திரும்பி சென்றுவிடுங்கள். மேலும், அங்கிருந்து எங்களையும் விட மிகவும் தூய, நன்றியுணர்வு மிக்க ஒரு புதிய படையை நிராகரிப்பாளர்களுக்கு எதிராக அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த சம்பவத்திலிருந்து அபூபக்ர் (ரலி) அவர்கள் எவ்வளவு தியாகம் செய்யக்கூடிய மனிதராக இருந்தார்கள்? என்பதை கணித்துக் கொள்ள முடியும். (குத்பாதே மஹ்மூத், தொகுதி 39, பக்கம் 220-221)

அடுத்து, ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒருமுறை ஸஹாபியிடம், இறைத் தூதர் (ஸல்) அவர்களின் காலத்தில் எல்லாரையும் விட மிகப் பெரிய வீரராகவும், தைரியசாலியாகவும் யார் இருந்தார்? என்று சில மக்கள் கேட்டனர்.

இன்றைய காலத்தில் ஷியா மற்றும் சன்னிப் பிரிவினர் கேட்பதைப் போன்று அந்தக் காலத்திலும் எவருடனெல்லாம் மக்களுக்கு தொடர்பு இருந்ததோ அவரை மக்கள் புகழ்ந்து வந்தனர். ஸஹாபியிடம் இந்தக் கேள்வி கேட்கப்பட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் நின்ற நபரே எங்களில் எல்லாரையும் விட மாபெரும் வீரராகவும், தைரியசாலியாகவும் கருதப்பட்டு வந்தார் என்று அந்த ஸஹாபி பதிலளித்தார்.

இந்தக் கருத்தை ஒரு போர் வீரரால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். மற்ற நபர்களால் முடியாது. எந்த நபருக்கு போரைப் பற்றி சரியாக தெரியுமோ, மேலும் போரின் அபாயங்களைக் குறித்து தெரியுமோ அவரால் மட்டுமே எந்த இடத்தில் அதிக அபாயம் இருக்குமோ அந்த இடத்தில நிற்கின்ற நபரின் அந்த துணிவு எத்தகையது? என்பதை புரிந்து கொள்ள முடியும்.

ஆக, கூறுகின்றார்கள்: எந்த நபர் தேசம் மற்றும் சமுதாயத்தின் உயிரோட்டமாக இருக்கின்றாரோ அவரை கொன்று விட வேண்டும் என்று எதிரி விரும்புகின்றான். ஏனெனில் அவருடைய மரணத்துடன் அனைத்து சண்டைகளும் முடிவிற்கு வந்து விடும் என்று எதிரி கருதுகின்றான். எனவே எந்த இடத்தில் அந்த நபர் நின்றாலும், எதிரி அந்தப் பக்கம் முழுமையான வலிமையுடன் தாக்குதல் நடத்துவான். அதாவது, ஒரு விஷயத்தின் மையப்புள்ளியாக இருக்கின்ற இடத்தின் பக்கமே எதிரி அதிகமான தாக்குதலை தொடுக்கின்றான். அத்தகைய இடத்தில் அதுபோன்ற நபரே நிற்க முடியும். அதாவது, அவருடைய பாதுகாப்பிற்காக அந்த தலைமையின் பாதுகாப்பிற்காக எல்லாரையும் விட பெரும் வீரராகவும், துணிவு மிக்கவராகவும் திகழ்கின்ற நபரே நிற்க முடியும்.

அடுத்து, அந்த ஸஹாபி கூறினார்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அருகில் பெரும்பாலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களே நின்று வந்தார்கள். மேலும், எங்களைப் பொருத்தவரை அன்னாரே எல்லாரையும் விட துணிவு மிக்கவராக இருந்தார்கள். (தஃப்ஸீர் கபீர், தொகுதி 10, பக்கம்-366)

அடுத்து, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா பனீ இஸ்ராயீலுடைய இரண்டாம் வசனத்திற்கு விளக்கமளித்தவாறு ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த விஷயமும் கவனத்தில் கொள்ளத் தக்கதாகும். அதாவது, اَسْرٰى بِعَبْدِهٖ என்பதிலிருந்து வழிநடத்தக்கூடியவர் வேறொருவராக இருந்தார். அதில் வழிநடப்பவருக்கென சொந்த அதிகாரம் எதுவும் இருக்கவில்லை என்று தெரிகிறது.

ஹிஜ்ரத் சம்பவமும் அவ்வாறே நிகழ்ந்தது. அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இரவிலேயே புறப்பட்டார்கள். மேலும் அவ்வாறு புறப்பட்டது அன்னாரின் விருப்பத்தின்படி அமைந்திருக்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்நேரத்தில் நிர்பந்தத்திற்குள்ளாகி புறப்பட்டார்கள். அதேநேரம் நிராகரிப்பாளர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக அன்னாருடைய வீட்டை முற்றுகையிட்டிருந்தார்கள். எனவே இந்தப் பயணத்தில் அன்னாருடைய விருப்பத்திற்கு எந்த பங்கும் இருக்கவில்லை. மாறாக, இறைவனின் விருப்பமானது அன்னாரை நிர்பந்தத்திற்கு ஆளாக்கியிருந்தது. அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை வழிநடத்தக்கூடியவன், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை (மக்காவிலிருந்து) வெளியேற்றியவன், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஹிஜ்ரத் செய்து செல்வதற்கு கூறியவன் அல்லாஹ்வாக இருந்தான். மேலும் அவனது விருப்பத்தின் காரணமாக அன்னார் (ஸல்) நிர்பந்தத்திற்கு ஆளாகி புறப்பட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) கூறுகின்றார்கள்: அடுத்து, கனவில் ஜிப்ரீல் (அலை) அவர்கள் பைத்துல் முகத்தஸ் பயணத்தில் இருந்ததுபோன்று ஹிஜ்ரத் பயணத்தில் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். இறைவனின் கீழ் ஜிப்ரீல் (அலை) அவர்கள் பணி செய்வதுபோன்று அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை பின்பற்றி நடந்தார்கள். மேலும், ஜிப்ரீல் என்பதன் பொருள் இறைவனின் பயில்வான் என்பதாகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அல்லாஹ்வின் சிறப்பான அடியாராக இருந்தார்கள். மேலும் மார்க்கத்திற்காக ஒரு துணிவு மிக்க பயில்வான் என்ற ரீதியில் செயல்பட்டு வந்தார்கள். (தஃப்ஸீர் கபீர், தொகுதி 4, பக்கம்-296)

அடுத்து, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

உண்மை என்னவென்றால், அல்லாஹ்வின் கூற்றின் மீது நம்பிக்கை கொண்ட நிலையில் மனிதனின் உள்ளத்தில் அவநம்பிக்கை உருவாகவே முடியாது. அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை இருந்தால் பின்னர் உள்ளத்தில் ஒருபோதும் நிராசை உருவாகவே முடியாது. இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு உதாரணமாக, தவ்ர் குகையில் ஏற்பட்ட நிலைமைக்கு பிறகு நம்பிக்கைக்கான என்ன சூழல் எஞ்சியிருந்தது? இறைத் தூதர் (ஸல்) அவர்கள் இரவின் இருளில் தமது வீட்டிலிருந்து புறப்பட்டு தவ்ர் குகையில் சென்று ஒளிந்து கொண்டார்கள். அந்த குகை எப்படிப்பட்டதாக இருந்ததென்றால் அதன் வாயில் மிகவும் திறந்ததாக இருந்தது. எல்லா மனிதரும் அதற்குள் எட்டி பார்க்க முடியும். மேலும், உள்ளே குதித்து செல்லக் கூடியதாகவும் இருந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் ஒரு தோழர் மட்டுமே இருந்தார். மேலும் அதுமட்டுமல்ல இருவருமே எவ்வித ஆயுதங்களும், எவ்வித வலிமையும் அற்றவர்களாக இருந்தனர். மக்காவைச் சேர்ந்த ஆயுதம் ஏந்திய மக்கள் அன்னாரை பின்தொடர்ந்து தவ்ர் குகையை வந்தடைந்தனர். மேலும், அவர் உள்ளே இருந்தால் நாம் அவரை கைது செய்வதற்காக ஏதுவாக நாம் குகையினுள் எட்டிப் பார்க்க வேண்டும் என்று அவர்களில் சிலர் வலியுறுத்தினர். எதிரி இவ்வளவு அருகில் வந்தடைந்ததைக் கண்டு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அழுதுவிட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எதிரி தலைமேல் வந்து நிற்கின்றான் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அப்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகவும் உணர்வுப்பூர்வமாக لَا تَحْزَنْ اِنَّ اللّٰهَ مَعَنَا என்று கூறினார்கள். ஏன் அஞ்சுகின்றீர்கள்? இறைவன் நம்முடன் இருக்கின்றான்.

பதற்றத்தின் அடிப்படையில் அன்னாருக்கு முன் எவ்வளவு பெரிய விஷயம் வந்தது என்று பாருங்கள்! மேலும் இந்த சம்பவத்திற்கு பிறகு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கோ அல்லது அன்னாரை கைது செய்வதற்கோ என்ன விஷயம் எஞ்சியிருந்தது? எதிரி வலிமை மிக்கவனாக இருந்தான். எதிரியுடன் போர் வீரர்கள் இருந்தனர். அவனுடன் ஆயுதங்களும் இருந்தன. (மற்றொரு பக்கம்) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முற்றிலும் ஒரேயொரு தோழருடன் மட்டுமே குகையில் அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் ஆயுதமும் இருக்கவில்லை. அரசாங்கமும் அன்னாருக்கு ஆதரவாக இருக்கவில்லை. அன்னாருடன் எந்தக் கூட்டமும் இருக்கவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்)அவர்கள் பெரும் எண்ணிக்கையில் எதிரி தமக்கு முன்னால் நிற்பதைக் கண்ட பிறகும்

لَا تَحْزَنْ اِنَّ اللّٰهَ مَعَنَا

என்று கூறினார்கள். எதிரி வலிமை வாய்ந்தவன் என்று நீங்கள் ஏன் அஞ்சுகின்றீர்கள்? அவன் இறைவனைக் காட்டிலும் வலிமை வாய்ந்தவனா? நம்முடன் இறைவன் இருக்கின்றபோது நாம் அச்சமடைவதற்கு என்ன காரணம் உள்ளது? ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் தமக்காக அவ்வாறு அச்சப்படவில்லை. மாறாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காகவே அச்சப்பட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஷியாப் பிரிவைச் சேர்ந்த சில மக்கள் இந்த சம்பவத்தை எடுத்து வைத்து இவ்வாறு கூறுகின்றனர். அதாவது, அபூபக்ர் (ரலி) நவூதுபில்லாஹ் ஈமான் அற்றவராக இருந்தார். அவர் தனது உயிரை கொடுப்பதற்கு பயந்துவிட்டார். ஆனால், வரலாறுகளில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

لَا تَحْزَنْ اِنَّ اللّٰهَ مَعَنَا

என்று கூறியபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் எனது உயிருக்காக அஞ்சவில்லை. நான் கொல்லப்பட்டால் ஒரு தனி நபரே கொல்லப்படுவார். நானோ தங்களுக்காகவே அஞ்சுகின்றேன். ஏனெனில் தங்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் பின்னர் உண்மை உலகத்திலிருந்து அழிந்து விடும். (குத்பாதே மஹ்மூத், தொகுதி 28, பக்கம் 416-417)

அடுத்து, ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த விஷயம் நபிமார்களுடன் மட்டுமே தொடர்புடையதல்ல. மாறாக, அவர்களைக் கடந்தும் அந்தந்தக் காலத்தில் இப்படிப்பட்ட சில

நபர்கள் இருந்துள்ளனர். அதாவது அந்தநேரத்தில் அவர்கள் செய்த பணிகளை மற்றவர்களால் செய்ய முடியாமல் இருந்தது. உதாரணமாக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களையே எடுத்துக் கொள்ளுங்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு காலத்தில் தமது சமுதாயத்திற்கு தலைமை தாங்குவார்கள் என்று அன்னாரைக் குறித்து எந்த நபராலும் கூறமுடியாமல் இருந்தது. அன்னார் (ரலி) பலவீனமான இயல்பு படைத்தவர் என்றே பொதுவாக கருதப்பட்டு வந்தது. இறைத் தூதர் (ஸல்) அவர்களின் காலத்து போர்களையே எடுத்துக் கொள்ளுங்கள். அன்னார் (ஸல்) எந்தப் பெரிய போரிலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை படையின் தளபதியாக ஆக்கவில்லை. நிச்சயமாக சில சிறிய, சிறிய போர்களில் அன்னார் (ரலி) அதிகாரியாக நியமிக்கப்பட்டு அனுப்பப்பட்டார்கள். ஆயினும், பெரும் போர்களில் எப்போதும் மற்ற மக்களே படைத் தளபதியாக ஆக்கப்பட்டு அனுப்பப்பட்டார்கள். மற்றபடி, திருக்குர்ஆனை போதிப்பதற்கான பணிகள் அல்லது நீதிமன்றம் தொடர்பான பணிகள் போன்றவை உள்ளன. அவையும் கூட அன்னாரிடம் ஒப்படைக்கப்படவில்லை. (அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை). எனினும், அபூபக்ருக்கான காலம் வரும். அப்போது அபூபக்ர் என்ன பணிகளை செய்வாரோ அவற்றை மற்றவர்களால் செய்ய முடியாது என்பதை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அறிந்திருந்தார்கள்.

ஆக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது யார் கலீஃபாவாக ஆக வேண்டும் என்பதில் முஸ்லிம்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. மேலும் தான் கலீஃபாவாக ஆகுவோம் என்ற எண்ணம் கூட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிந்தனையில் தோன்றவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) போன்றவர்கள் தான் அதற்கு தகுதியானவர்கள் என்றே அன்னார் (ரலி) கருதியிருந்தார்கள். அன்சார் சகோதரர்களுக்கு மத்தியில் உணர்வு எழுந்திருந்தது. அதாவது கிலாஃபத் என்பது தங்களைச் சேர்ந்தவர்களில் ஒருவருக்குதான் கிடைக்க வேண்டும் என அவர்கள் விரும்பினர். ஏனெனில், நாங்கள் இஸ்லாத்திற்காக தியாகங்கள் செய்துள்ளோம். எனவே தற்போது கிலாஃபத்திற்கு நாங்களே உரிமை படைத்தவர்கள் என்பது அன்சார் சஹாபிகளின் எண்ணமாக இருந்தது. மற்றொரு பக்கம், தங்களைச் சேர்ந்தவர்களில் ஒருவர் கலீஃபாவாக வர வேண்டும் என்பது முஹாஜிர் சஹாபிகளின் எண்ணமாக இருந்தது. எங்களில் ஒருவர் கலீஃபாவாக வர வேண்டும் என்று முஹாஜிர் சஹாபிகள் கூறிவந்தனர். இறுதியில், முஹாஜிர் சஹாபிகளில் ஒருவர் கலீஃபாவாக இருக்கட்டும். மேலும் அன்சார் சஹாபிகளைச் சேர்ந்தவர்களில் ஒரு கலீஃபா இருக்கட்டும் என்ற விஷயத்தில் அன்சார் சகோதரர்களின் சண்டை முடிவிற்கு வந்தது. இந்தச் சண்டையை அகற்றுவதற்காக ஒருக் கூட்டம் கூட்டப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நிச்சயமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நல்ல மற்றும் பெரிய மனிதர் ஆவார்கள். ஆயினும், அந்த சச்சரவை சரிசெய்வது அன்னாருடைய பணி அல்ல. அந்த இடத்தில் மென்மை மற்றும் நேசத்திற்கு இடமில்லை என்று நான் அந்நேரத்தில் கருதினேன். (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களோ மென்மை மற்றும் நேசத்தை வெளிப்படுத்தக் கூடியவர் ஆவார்கள்)

ஆக, அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

குரைஷியர்களில் இருந்தே கலீஃபா வர வேண்டும் என்ற விஷயத்தை நிரூபிப்பதற்காகவும், அன்சார் சகோதரர்களிலிருந்து ஒரு கலீஃபா மற்றும் முஹாஜிர் சகோதரர்களிலிருந்து ஒரு கலீஃபா என்பது முற்றிலும் தவறானது என்பதையும் நிரூபணம் செய்வதற்காகவும் நான் சிந்தித்து, சிந்தித்து பல சான்றுகளை எடுக்கத் தொடங்கியிருந்தேன்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: நான் ஏராளமான சான்றுகளை சிந்தித்திருந்தேன். பின்னார் அந்த சண்டைக்கு தீர்வு காண்பதற்காக கூட்டப்பட்டிருந்த அந்த சபைக்கு நான் சென்றேன்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் என்னுடன் இருந்தார்கள். நான் சொற்பொழிவு நிகழ்த்த வேண்டும் என்றும், நான் சிந்தித்து எடுத்து வைத்திருந்த சான்றுகளால் மக்களை ஒப்புக் கொள்ள வைக்க வேண்டும் என்றும் நான் விரும்பினேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அந்த சபையில் பேசுவதற்கு உரிய கம்பீரமும், ஆதிக்கமும் பெற்ற நபர் இல்லை என்றும் நான் கருதியிருந்தேன். ஆனால் நான் எழுந்து நிற்பதற்கு முயலவே செய்தேன். (நான் எழுந்து நிற்கதான் முயற்சி செய்தேன் என ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்) அதற்குள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கோபத்துடன் கையால் அழுத்தி, அமருங்கள் என்று என்னிடம் கூறினார்கள். மேலும் தான் சுயமே எழுந்து நின்று சொற்பொழிவு நிகழ்த்த தொடங்கிவிட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவன் மீது ஆணையாக! நான் சிந்தித்து வைத்திருந்த அந்த சான்றுகள் அனைத்தையும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எடுத்துரைத்து விட்டார்கள். பின்னர் மேலும், மேலும் பல சான்றுகளை எடுத்துரைத்துக் கொண்டே சென்றுவிட்டார்கள். எந்த அளவிற்கு என்றால், அன்ஸார் சகோதரர்களின் உள்ளம் ஆறுதல் அடைந்து விட்டது. மேலும் அவர்கள் முஹாஜிர்களின் கிலாஃபத்திற்கான விதிமுறைகளை ஒப்புக் கொண்டுவிட்டார்கள்.

இது அதே அபூபக்ரே ஆவார்கள். அதாவது இந்த அபூபக்ரைக் குறித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சுயமே கூறுகின்றார்கள்: நான் ஒருமுறை ஒரு தர்க்கத்தின்போது கடை வீதியில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஆடையை கிழித்துவிட்டேன். மேலும் அன்னாரை அடிப்பதற்கும் தயாராகிவிட்டேன். இவர் அதே அபூபக்ராகவே இருந்தார். அதாவது இந்த அபூபக்ரைக் குறித்து, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உள்ளம் மென்மையானதாகும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறிவந்தார்கள். ஆனால், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மரணிக்கும் தருணம் அருகில் வந்தபோது அல்லது மரணத்திற்கு முன்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள். அதாவது எனது மரணத்திற்கு பின்னர் அபூபக்ரை கலீஃபாவாக ஆக்கிக் கொள்ளுங்கள் என்று மக்களிடம் கூறிவிட வேண்டும் என்று எனது உள்ளத்தில் மீண்டும் மீண்டும் ஆசை எழுந்தது. ஆனால், பின்னர் நான் என்னை தடுத்துக் கொண்டேன். ஏனென்றால், எனது மரணத்திற்கு பிறகு, அல்லாஹ்வும் அவனது நம்பிக்கைக் கொண்ட அடியார்களும் அபூபக்ரைத் தவிர வேறு எவரையும் கலீஃபாவாக ஆக்கமாட்டார்கள் என்பதை எனது உள்ளம் அறிந்திருந்தது.

ஆக, அவ்வாறே நிகழ்ந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களே கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அன்னார் மென்மையான இதயம் படைத்த மனிதராக இருந்தார்கள். அன்னார் (ரலி) எவ்வளவு மென்மையான இயல்பு படைத்தவராக இருந்தார்கள் என்றால், ஒருமுறை அன்னாரை அடிப்பதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கடை வீதியில் முன்னால் சென்றார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஆடையையும் அன்னார் (ரலி) கிழித்துவிட்டார்கள். ஆனால் அதே அந்த அபூபக்ருடைய நிலை எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், ஹஸ்ரத் உமர் (ரலி) அன்னாரிடம் வந்தார்கள். மேலும் முழு அரேபியாவும் எதிரியாகிவிட்டது. மதீனா மற்றும் ஒரு சிறிய ஊரில் மட்டுமே ஜமாஅத்தான தொழுகை நடைபெறுகிறது. மற்ற மக்கள் தொழுகையை நிறைவேற்றுகின்றார்கள் தான். ஆனால், அவர்களிடம் எந்த அளவிற்கு பிரிவினை உருவாகிவிட்டதென்றால், ஒருவர் மற்றவருக்கு பின்னால் நின்று தொழுவதற்கு தயாராக இல்லை என்று கூறினார்கள். கருத்து வேறுபாடு எந்த அளவுக்கு அதிகரித்துவிட்டதென்றால், அவர்கள் எவருடைய விஷயத்தையும் கேட்க தயாராக இல்லை. முஸ்லிம்களாக மாறி ஐந்து மாதம் ஆறு மாதமே ஆன அரேபியாவின் அறிவீனமான மக்கள் ஸகாத் ரத்து செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கின்றனர்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

இந்த மக்கள் ஸகாத் விவகாரத்தையே புரியாதபோது, ஓரிரு வருடத்திற்காக அவர்களுக்கு ஸகாத் ரத்து செய்துவிடுவதில் என்ன தவறு உள்ளது? ஆக, எந்நேரமும் கையில் வாளை ஏந்திக் கொண்டு நின்று கொண்டிருந்த அந்த உமர் (ரலி), சிறு சிறு விஷயத்தில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! கட்டளையிடுங்கள் நான் அவரது கழுத்தை வெட்டிவிடுகிறேன் என்று கூறி வந்த அதே உமர் (ரலி), அந்த (முர்தத் ஆன) மக்களின் விவகாரத்தில் பின் வாங்கிவிட்டார்கள். மேலும், எந்த அளவிற்கு அச்சமடைந்துவிட்டார்கள் என்றால், அந்த அறிவீனமான மக்களுக்கு சில காலத்திற்கு ஸகாத் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக புரிய வைப்போம் என்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்து விண்ணப்பம் வைத்தார்கள். ஆனால், நான் ஒரு முறை அன்னாரை அடிப்பதற்கு தயாராகிவிட்டேன். மேலும் கடை வீதியில் அன்னாரின் ஆடையை கிழித்துவிட்டேன் என்று ஒரு சமயத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறும் அளவிற்கு மென்மையான உள்ளம் படைத்திருந்த அதே அபூபக்ர் (ரலி) அவர்கள் தற்போது மிகவும் கோபத்துடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை நோக்கி பார்த்தார்கள். அதாவது கிளர்ச்சியாளர்களாக மாறி வரும் மக்களை எதுவும் கூறவேண்டாம் என்றும் இரண்டு, மூன்று ஆண்டுகள் வரை ஸகாத் வாங்க வேண்டாம்: நாம் அவர்களுக்கு புரிய வைத்துவிடுவோம் என்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரிடம் இந்த விஷயத்தைக் கூறியபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கோபத்துடன் பார்த்தார்கள். மேலும், உமரே! இறைவனும், அவனது தூதரும் செய்யாத விஷயத்தை செய்யும்படி நீர் வேண்டுகின்றீர் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அதற்கு, அது சரிதான், ஆனால் எதிரியின் படை மதீனாவின் சுவர்கள் வரை வந்துடைந்துள்ளன. அந்த மக்கள் முன்னேறி வருவதும், நாட்டில் குழப்பமான நிலை உருவாகிவிடுவதும் சிறந்ததாக இருக்குமா? அல்லது அவர்களுக்கு ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு ஸகாத் ரத்து செய்வது சிறந்ததாக இருக்குமா? அல்லது எப்படியாவது அவர்களுடன் சமாதானம் செய்து கொள்வது சிறந்ததாக இருக்குமா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அப்போது, இறைவன் மீது ஆணையாக! எதிரி மதீனாவிற்குள் நுழைந்துவிட்டாலும், மேலும் அதன் வீதிகளில் முஸ்லிம்களை கொன்று குவித்தாலும், (முஸ்லிம்) பெண்களின் பிணங்களை நாய்கள் இழுத்துக் கொண்டு சென்றாலும் அந்நிலையிலும் நான் அவர்களின் ஸகாதை ரத்து செய்ய மாட்டேன். இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இந்த மக்கள் ஒரு துண்டு கயிறை ஸகாதாக கொடுத்திருந்தால் நான் அதையும் நிச்சயம் அவர்களிடமிருந்து வசூல் செய்வேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

பின்னர் அன்னார் (ரலி) கூறினார்கள்: உமரே! நீங்கள் அஞ்சுகின்றீர்கள் என்றால் நிச்சயமாக நீங்கள் சென்றுவிடுங்கள். நான் தனியாகவே அவர்களுடன் சண்டையிடுவேன். அவர்கள் தங்களது விஷமங்களிலிருந்து விலகாத வரை நான் விலகமாட்டேன். ஆக, சண்டை நிகழ்ந்தது. மேலும், அன்னார் வெற்றி பெற்றார்கள். அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வெற்றி பெற்றார்கள். மேலும் தமது மரணத்திற்கு முன்னர் மீண்டும் முழு அரேபியாவையும் தமக்கு கீழ் கொண்டு வந்துவிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது வாழ்வில் செய்த பணிகள்

அன்னாருடைய பங்காகவே இருந்தன. வேறு எந்த நபரும் அந்த வேலையை செய்திருக்க முடியாது. (குத்பாதே மஹ்மூத், தொகுதி 30, பக்கம் 198-200)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

மக்கத்து தலைவர்களுக்கு, பொது மக்களுக்கு மத்தியில் இந்த வகையில் மரியாதையும், கண்ணியமும் கிடைத்திருந்தது. அதாவது, மக்கள் அவர்களுக்கு முன்னால் பேசுவதற்கு அச்சம் கொண்டு வந்தனர். மேலும் மக்கள் மீது அவர்களுடைய நன்மைகள் இந்த அளவிற்கு அதிகமாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. அதாவது அவர்களுக்கு முன்னால் எந்த நபரும் பார்வையை உயர்த்தி பார்க்க மாட்டார். அவர்களின் மகத்துவத்தைக் குறித்து இந்த சம்பவத்திலிருந்து தெரிய வருகிறது. அதாவது ஹுதைபியா உடன்படிக்கை சந்தர்ப்பத்தின்போது, எந்த தலைவரை மக்காவாசிகள் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் பேச்சுவார்த்தைக்காக அனுப்பி வைத்தார்களோ, அவர் ஒவ்வொரு பேச்சின் போதும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருளுக்குரிய தாடியை தொட்டுக் கொண்டிருந்தார். இதைக் கண்ட ஒரு சஹாபி தனது தோளிலிருந்த வாளை அவரது கையில் அடித்தார். மேலும், உனது அசுத்தமான கையை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருளுக்குரிய தாடியில் வைக்காதே என்று கூறினார். அப்போது, எனது கையில் வாளால் அடித்த நபர் யார்? என்பதை அறிவதற்காக அவர் பார்வையை உயர்த்தி பார்த்தார். அந்த ஸஹாபி போர் கவசம் அணிந்திருந்தார். எனவே அவருக்கு அந்த ஸஹாபியின் கண்கள் மட்டுமே தெரிந்தன. அவர் சிறிதுநேரம் வரை மிகவும் உன்னிப்பாக பார்த்தார். பின்னர் நீர் இன்ன நபர் தானே? என்று கேட்டார். அதற்கு ஆம். என்று அந்த ஸஹாபி கூறினார். அப்போது அவர் கேட்டார்:

நான் இன்ன இன்ன சந்தர்ப்பத்தில் உமது குடும்பத்தை இன்ன துன்பத்திலிருந்து காப்பாற்றினேனே? மேலும் இன்ன சந்தர்ப்பத்தில் நான் உமக்கு இன்ன நன்மை செய்தேனே! அது உமக்கு தெரியாதா? நீர் எனக்கு முன்னால் பேசுகின்றீரா?

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அந்த நன்மையை அந்த விஷயத்தைக் குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

இன்றைய காலத்தில் நாம் பார்த்தோம் என்றால் ஒருவர் செய்த நன்மையை மறக்கின்ற தன்மை மக்களிடத்தில் இந்த அளவிற்கு சாதாரணமாகிவிட்டது. அதாவது, ஒருவருக்கு மாலையில் நன்மை செய்யப்பட்டால் அவர் காலையில் மறந்துவிடுகின்றார். மேலும், நான் இனி வாழ்நாள் முழுவதும் அவருக்கு அடிமையாக இருக்க வேண்டுமா? என்று கேட்கின்றார். எனக்கு நன்மை செய்துவிட்டார் என்பதால் என்ன ஆகிவிட்டது? அவரது வாழ்நாள் முழுவதுற்குமான அடிமைத் தனம் ஒரு பக்கம் இருக்கட்டும். அவரால் ஓர் இரவு வரை கூட அந்த நன்மையை நினைவில் வைப்பவராக இருக்க முடிவதில்லை. ஆனால், அரேபியர்களிடத்தில் உயர் தரமான நன்றியுணர்வு இருந்தது.

தற்போது அது ஒரு மிகவும் இக்கட்டான சந்தர்ப்பமாக இருந்தது. ஆனால், அந்த நபர் தம் மீது செய்த நன்மைகளை குறிப்பிட்டு கூறியபோது அந்த ஸஹாபி தமது பார்வையை நிலத்தில் தாழ்த்திக் கொண்டார். மேலும் வெட்கத்திற்குள்ளாகி பின்னால் விலகிவிட்டார். இந்த அளவிற்கு செய்த நன்மைக்கு மதிப்பு இருந்தது. அதன் பிறகு அந்த நபர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் பேசத் தொடங்கிவிட்டார். மேலும் நான் அரேபியாவின் தந்தை ஆவேன். நீங்கள் உங்களது சமுதாயத்தை கண்ணியப்படுத்துங்கள்.பாருங்கள்! உங்களைச் சுற்றி ஒன்றுகூடியுள்ளவர்கள் துன்பம் வரும்போது உடனே ஓடிவிடுவார்கள். கடைசியில் உங்களது சமுதாயம் தான் உங்களின் உதவிக்கு வரும். எனவே ஏன் உங்களது சமுதாயத்தை இழிவுபடுத்துகின்றீர்கள்? நான் அரேபியாவின் தந்தை ஆவேன் என்று அவர் கூறினார். அந்த நபர் மீண்டும், மீண்டும் நான் அரேபியர்களின் தந்தை ஆவேன் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கூறிக் கொண்டிருந்தார். நீங்கள் எனது கூற்றை ஏற்றுக் கொள்ளுங்கள். நான் எவ்வாறு கூறுகின்றேனோ அதன்படி உம்ரா செய்யாமல் திரும்பி சென்றுவிடுங்கள் என்று அவர் கூறினார்.

இதற்கிடையில், அவர் தனது கூற்றின் மீது அழுத்தம் கொடுப்பதற்காகவும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஒப்புக் கொள்ளச் செய்வதற்காகவும், அன்னாருடைய அருளுக்குரிய முடியின் மீது மீண்டும் கை வைத்தார். அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீதும், அன்னாரின் அருளுக்குரிய முடியின் மீதும் கை வைத்தது ஒரு அன்பின் வடிவில் இருந்தது. மேலும் மிகவும் தாழ்மையாக அந்த விஷயத்தை கூறுவதற்காக அவ்வாறு செய்து வந்தார். மேலும் தனது கூற்றை அன்னாரை ஏற்கச் செய்ய வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்து வந்தார். இருந்தபோதிலும் அதில் நகையாடுதலின் ஓர் அம்சமும் இருந்தது. எனவே ஸஹாபிகளால் அதனை சகித்துக் கொள்ள முடியவில்லை.

அந்த நபர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தாடியை தொட்ட உடனேயே மீண்டும் மற்றொரு நபர் வேகமாக தனது கையை அவரது கையில் அடித்தார். மேலும், அசுத்தமான உனது கையை இறைத் தூதர் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முடியை நோக்கி நீட்டாதே! என்று அந்த ஸஹாபி கூறினார்.

அந்த நபர் மீண்டும், தன்னை தடுத்த அந்த நபர் யார்? என்று அறிந்து கொள்வதற்காக பார்வையை உயர்த்தினார். மேலும் சிறிது நேரம் உன்னிப்பாக பார்த்தார். இறுதியில் அடையாளம் கண்டு கொண்ட அந்த நபர் தனது கண்களை தாழ்த்திக் கொண்டார்.

நிராகரிப்பாளர்களின் பிரதிநிதியாக வந்திருந்த அந்த நபர், அந்த ஸஹாபியை அடையாளம் கண்டு கொண்டு விட்ட பிறகு தனது கண்களை தாழ்த்திக் கொண்டார். அவர் பார்த்தபோது அந்த ஸஹாபி அபூபக்ராக இருந்தார்கள். அவர் கூறினார்: அபூபக்ரே! உம் மீது எனது எந்த நன்மையும் இல்லை என்பதை நான் அறிவேன். நீர் எப்படிப்பட்ட நபர் என்றால் உமக்கு நான் எந்த நன்மையும் செய்யவில்லை.

ஆக, அந்த சமுதாயம் இந்த அளவிற்கு மற்றவர்களுக்கு நன்மை செய்யக்கூடிய சமுதாயமாக இருந்தது. அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை தவிர்த்து, அங்கு எந்த அளவிற்கு அன்சார் மற்றும் முஹாஜிர் சகோதரர்கள் இருந்தனரோ அவர்கள் அனைவருக்கும் அந்த தலைவர் ஏதாவது ஒரு நன்மை செய்திருந்தார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை தவிர, அந்த நபரின் கையை தடுப்பதற்கு வேறு எவருக்கும் துணிவு இருக்கவில்லை. (குத்பாதே மஹ்மூத், தொகுதி 20, பக்கம் 484-485)

அந்த நபரின் எந்த நன்மையையும் பெறாத ஒற்றை நபராக அன்னார் (ரலி) மட்டுமே இருந்தார்கள்.

பின்னர், ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஸகாத் எப்படிப்பட்ட ஒரு விஷயம் என்றால், எவர் அதனை கொடுப்பதில்லையோ அவர் இஸ்லாத்திலிருந்து வெளியேறியவர் ஆகிவிடுகின்றார். இறைத் தூதர் (ஸல்) அவர்களின் மரணத்திற்கு பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் சில மக்கள் ஸகாத் கொடுக்க மறுத்துவிட்டனர். மேலும் அவர்கள் கூறினர்:

خُذۡ مِنۡ اَمۡوَالِهِمۡ صَدَقَةً تُطَهِّرُهُمۡ
وَتُزَكِّيۡهِمۡ بِهَا وَصَلِّ عَلَيۡهِمۡ

என்ற இந்த வசனத்தில் நீர் (ஸகாத்) வாங்குவீராக என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கே கட்டளை வழங்கப்பட்டுள்ளது. தற்போது அன்னார் இல்லாதபோது எவர் வாங்க முடியும்?

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பிரதிநிதியாக இருப்பவர் அதனை வாங்குவார் என்பதை அறிவிலிகள் புரியவில்லை. ஆனால், நாங்கள் ஸகாத் கொடுக்க மாட்டோம் என்று அவர்கள் அறிவீனத்தால் கூறிவிட்டனர். ஒருபக்கம் மக்கள் ஸகாத் கொடுக்க மறுத்துவிட்டனர். மற்றொரு பக்கம் குழப்பம் தோன்றிவிட்டது. ஏறக்குறைய முழு அரேபியாவும் முர்தத் ஆகிவிட்டது. பல நபித்துவாதிகள் தோன்றி விட்டனர். நவூதுபில்லாஹ் இஸ்லாம் அழிய இருக்கின்றது என்பது போன்று தோன்றியது. அதுபோன்ற இக்கட்டான நேரத்தில், தாங்கள் ஸகாத் கொடுக்க மறுத்துவிட்ட மக்களிடம் தற்போதைய சூழலில் மென்மையுடன் நடந்து கொள்ளுங்கள் என்று ஸஹாபிகள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடத்தில் கூறினர். மாபெரும் வீரர் என்று கூறப்படும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், நான் எவ்வளவுதான் வீரராக இருந்தாலும் அபூபக்ர் (ரலி) அவர்களின் அளவிலான வீரர் கிடையாது. ஏனெனில், அந்நேரத்தில் அந்த மக்களிடம் மென்மையாக நடக்க வேண்டும் என்று நானும் கூறினேன். மேலும் முதலில் நிராகரிப்பாளர்களுக்கு முடிவு கட்டுங்கள். பின்னர் இவர்களின் சீர்திருத்தத்தை மேற்கொள்ளுங்கள் என்றும் நான் கூறினேன்.

ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களால் வழங்கப்பட்ட கட்டளையை மாற்றுவதற்கு இப்னு அபீ கஹாஃபாவிற்கு என்ன தகுதி உள்ளது? அந்த மக்கள் முழுமையாக ஸகாத் கொடுக்காத வரை நான் அவர்களுடன் போரிடுவேன். மேலும் அந்த மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஒட்டகத்தை கட்டக்கூடிய ஒரு கயிறை ஸகாத்தாக கொடுத்திருந்தார்கள் என்றால் அதை அவர்கள் கொடுக்கும் வரை நான் அவர்களுடன் போரிடுவேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) கூறினார்கள்.

இறைவனால் கலீஃபாவாக ஆக்கப்பட்டவர் எந்த அளவிற்கு துணிவும் வீரமும் மிக்கவராக இருப்பார் ? என்பது ஸஹாபிகளுக்கு அந்தநேரத்தில் தெரிய வந்தது. இறுதியில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த முர்தத்களுக்கு முடிவு கட்டினார்கள். மேலும் அவர்களை ஸகாத் கொடுக்க வைத்துவிட்டார்கள். (இஸ்லாஹே நஃப்ஸ், அன்வாருல் உலூம், தொகுதி 5, பக்கம்-452)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பொருள் தியாகத்தைக் குறித்து வருகின்றது. ஒரு நூலாசிரியர் எழுதுகின்றார்: ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) ஈமான் கொண்டபோது அன்னாரிடம் நாற்பதாயிரம் திர்ஹம் ஒரு பெரும் தொகை இருந்தது. இதை தவிர வியாபார செல்வங்கள், சொத்துகளும் இருந்தன என்பது வெளிப்படையாகும். இன்னும் கூறப்போனால் ஓர் அறிவிப்பிற்கேற்ப அன்னாரிடம் பத்து மில்லியன் அதாவது பத்து லட்சம் திர்ஹம் தொகை இருந்தது. மக்காவில் சாதாரண முஸ்லிம்களின் உதவி மற்றும் ஏழை முஸ்லிம்களின் பராமரிப்பிற்காக ஆயிரக்கணக்கான திர்ஹம்களை அன்னார் செலவிட்டார்கள். எனினும், அன்னார் ஹிஜ்ரத் செய்தபோது ஐந்தாயிரம் அல்லது ஆறாயிரம் திர்ஹம் தொகையை ரொக்கமாக தம்முடன் வைத்திருந்தார்கள். ஓர் அறிவிப்பிற்கேற்ப இந்த அனைத்து தொகையையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் செலவினங்களுக்காக அன்னார் (ரலி) சேமித்து வைத்திருந்தார்கள். மேலும் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்ற நேரத்தில் எடுத்துச் சென்றார்கள். அந்த தொகையிலிருந்தே அன்னார் ஹிஜ்ரத்தின்போது பயண செலவினங்கள் மட்டுமின்றி ஹிஜ்ரத்திற்கு பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினர்களில் சிலரின் பயணச் செலவுகளுக்காகவும் கொடுத்தார்கள். மேலும், மதீனாவில் முஸ்லிம்களுக்காக சில நிலங்களையும் விலைக்கு வாங்கினார்கள். (அத்தப்காதுல் குப்ரா, தொகுதி 3, பக்கம்-128, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 2012)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் இறுதியாக நோய்வாய்பட்டிருந்தார்கள். அவ்வாறு நோய்வாய்பட்டிருந்த நிலையில் தான் அன்னாரின் மரணம் நிகழ்ந்தது. அந்த காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வெளியில் வந்தார்கள். மேலும், தமது தலையை ஒரு துணியால் அன்னார் (ஸல்) கட்டியிருந்தார்கள்.

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 05-19 January 2022 Issue No. 1 - 3

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அன்னார் (ஸல்) மேடையில் அமர்ந்திருந்தார்கள். மேலும் அல்லாஹ்வை புகழ்ந்து தூய்மையை எடுத்துரைத்தார்கள். மேலும் கூறினார்கள். தனது உயிராலும், செல்வத்தாலும் என்னுடன் அழகிய முறையில் நடந்து கொண்டவர் அபூபக்ர் இப்னு அபீ கஹாஃபாவை விட வேறு எவரும் இல்லை. (ஸஹீஹ் புகாரி, அறிவிப்பு எண்:467)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் செல்வம் எனக்கு பயனளித்ததைப் போன்று ஒருபோதும் எவருடைய செல்வமும் பயனளிக்கவில்லை. அறிவிப்பாளர் கூறுகின்றார்:

இதைக் கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அழத் தொடங்கிவிட்டார்கள். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நானும், எனது செல்வமும் தங்களுக்காக மட்டுமே இருக்கின்றோம். அல்லாஹ்வின் தூதரே! என்று கூறினார்கள். (சுனன் இப்னு மாஜா, ஹதீஸ் எண்:94)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு ஜிஹாதிற்கான சந்தர்ப்பத்தின் போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் (எப்போதும்) என்னை விட முந்திவிடுகின்றார்கள். எனவே இன்று நான் அன்னாரை முந்திவிட வேண்டும் என்ற எண்ணம் எனக்கு தோன்றியது. இந்த எண்ணம் கொண்டவாறு நான் வீட்டிற்கு சென்றேன். மேலும், எனது செல்வத்திலிருந்து பாதி செல்வத்தை எடுத்துக் கொண்டு அதனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஒப்படைப்பதற்காக சென்றேன். அந்தக் காலம் இஸ்லாத்திற்கு மிகவும் துன்பத்திற்குரிய காலகட்டமாக இருந்தது. ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது அனைத்து செல்வத்தையும் எடுத்துக் கொண்டு வந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது முழு செல்வத்தையும் எந்த அளவிற்கு எடுத்துக் கொண்டு வந்தார்கள் என்றால் போர்வை மற்றும் கட்டில்களையும் கூட எடுத்துக் கொண்டு வந்தார்கள். ஆக, எப்படியும் இருக்கட்டும்.

அன்னார் தான் கொண்டு வந்த செல்வத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் வழங்கிவிட்டார்கள். அனைத்து செல்வத்தையும் கொடுத்துவிட்டார்கள். வீட்டில் எதனை விட்டுவிட்டு வந்துள்ளீர்கள்? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, அல்லாஹ்வையும், அவனது பெயரையும் என்று அன்னார் (ரலி) பதிலளித்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இதைக் கேட்ட எனக்கு மிகவும் வெட்கம் ஏற்பட்டது. இன்று நான் முழு அழுத்தம் கொடுத்து அபூபக்ர் (ரலி) அவர்களை விட முந்திவிட விரும்பினேன். ஆனால் இன்றும் அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னை முந்திவிட்டார்கள் என்று நான் புரிந்து கொண்டேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது அனைத்து செல்வத்தையும் கொண்டு வந்துவிட்டார்கள் என்றால் பின்னர் குடும்பத்தினருக்காக என்ன வைத்திருந்தார்கள்? என்று ஒருவர் கேட்பது சாத்தியம் ஆகும். எனவே இது தொடர்பாக இதனை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, இதன் பொருள் வீட்டிலிருந்த அனைத்து பொருட்கள் என்பதாகும். அன்னார் (ரலி) வணிகராக இருந்தார்கள். வியாபாரத்தில் முதலீடு செய்திருந்த செல்வத்தை கொண்டு வரவுமில்லை. மேலும் வீட்டை விற்றுவிட்டும் வரவில்லை. (ஃபஸாயிலுல் குர்ஆன்(3), அன்வாருல் உலூம், தொகுதி 11, பக்கம்-577) (குத்பாதே மஹ்மூத், தொகுதி 37, பக்கம்-134-135)

மாறாக, அன்னார் (ரலி) வீட்டில் இருந்த பொருட்களை எடுத்துக் கொண்டு வந்துவிட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த சம்பவத்திலிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய இரண்டு சிறப்பம்சங்கள் வெளிப்பட்டுள்ளன. ஒன்று, தியாகத்தில் அன்னார் அனைவரையும் முந்திவிட்டார்கள். இரண்டாவது, தனது அனைத்து செல்வத்தையும் எடுத்து வந்தபோதிலும் அனைவரையும் விட முதலில் வந்தடைந்துவிட்டார்கள். மேலும் எவ்வளவு வீட்டில் வைப்பது? எவ்வளவு கொண்டு செல்வது? என்ற சிந்தனையிலேயே இருந்தவர்கள் தான் குறைவாக கொடுத்தார்கள். அன்னார் (ரலி) தமது அனைத்து செல்வங்களையும் எடுத்துக் கொண்டு வந்துவிட்டார்கள். அவ்வாறு இருந்தபோதிலும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றவர்கள் மீது ஆட்சேபனை செய்ததாக அன்னாரைக் குறித்து எங்கும் வரவில்லை. அன்னார் (ரலி) தமது அனைத்து செல்வங்களையும் எடுத்துக் கொண்டு வந்துவிட்டார்கள். எனினும், பாருங்கள்! நான் எடுத்து வந்துவிட்டேன்.ஆனால் மற்றவர்கள் கொண்டு வரவில்லை என்று அன்னார் (ரலி) பிறர் மீது ஆட்சேபனை செய்யவில்லை.

நான் அல்லாஹ்விற்கு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன். நான் அல்லாஹ்விற்கு எந்த நன்மையும் செய்யவில்லை. மாறாக அவன் எனக்கு இதற்கு நற்பேறு வழங்கியுள்ளான். இது அவனது கருணை ஆகும் என்றே பொருள் தியாகம் செய்த பிறகும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கருதி வந்தார்கள். (குத்பாதே மஹ்மூத், தொகுதி 17, பக்கம்-580)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இது தொடர்பாக கூறுகின்றார்கள்:

பொருள் தியாகம் செய்யக்கூடியவர்கள் தம்மை பார்க்க வேண்டும். தாமும் சந்தா கொடுக்காமல் அல்லது சிறிய அளவில் கொடுத்துவிட்டு, பாருங்கள்! இன்ன நபர் குறைவாக கொடுத்துள்ளார் அல்லது இவ்வளவு கொடுத்துள்ளார் என்று மற்றவர்கள் மீது ஆட்சேபனை செய்யக்கூடிய அந்த நயவஞ்சகர்களைப் போன்று அவர்கள் இருக்கக் கூடாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஸஹாபிகளின் அந்தக் கூட்டம் தூய்மையான கூட்டமாக இருந்தது. அதனைக் குறித்து திருக்குர்ஆன் முழுவதும் பாரட்டப்பட்டுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களுடன் ஸஹாபிகளை முற்றிலும் பின்பற்றக்கூடிய மக்கள் இருப்பர். மேலும் அந்த ஸஹாபிகள் தமது செல்வம், தமது தேசம் போன்றவற்றை உண்மையான வழியில் அர்ப்பணித்துவிட்டார்கள். மேலும் அனைத்தையும் அவர்கள் விட்டுவிட்டார்கள் என்று இறைவன் கூறியிருக்கும் போது நீங்கள் அப்படிப்பட்ட மக்களாக இருக்கின்றீர்களா? ஹஸ்ரத் ஸித்தீகே அக்பர் (ரலி) அவர்களுடைய விவகாரத்தை நீங்கள் பெரும்பாலும் கேட்டிருப்பீர்கள்.

ஒருமுறை இறை வழியில் செல்வத்தை கொடுக்குமாறு கட்டளை கிடைத்தது. அப்போது அன்னார் (ரலி) வீட்டிலிருந்த அனைத்து செல்வங்களையும் எடுத்துக் கொண்டு வந்துவிட்டார்கள். வீட்டில் எதனை விட்டுவிட்டு வந்துள்ளீர்கள்? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டபோது இறைவனையும், அவனது தூதரையும் விட்டுவிட்டு வந்துள்ளேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். ஏழைகளை ஆடைகள் உடுத்தச் செய்தார்கள்.

அந்த மக்கள் இறை வழியில் ஷஹீதாகிவிட்டனர். வாள்களுக்கு கீழ் சொர்க்கம் உள்ளது என்றே அவர்கள் தொடர்பாக எழுதப்பட்டுள்ளது என்பதை புரிந்து கொள்ளுங்கள். (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம்-43, பதிப்பு 1984)

அடுத்து, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஸஹாபிகளின் நிலைமைகளை பாருங்கள்! சோதனைக்கான நேரம் வந்தபோது எவரிடத்தில் என்ன இருந்ததோ அதனை அவர்கள் இறை வழியில் கொடுத்துவிட்டனர். ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் எல்லாரையும் விட முதலில் கம்பளியை அணிந்து கொண்டு வந்துவிட்டார்கள். பின்னர், அந்த கம்பளிக்கு அல்லாஹ்வும் என்ன நற்கூலி வழங்கினான்! அதாவது, அனைத்தையும் எடுத்துக் கொண்டு வந்தார்கள். ஒரேயொரு கம்பளியை மட்டும் தாம் உடுத்திக் கொண்டார்கள். அதற்கு அல்லாஹ் நற்கூலி என்ன வழங்கினான் என்றால், அனைவரையும் விட அன்னாரே முதலில் கலீஃபா ஆனார்கள்.

கூறினார்கள்: அசல் சிறப்பு என்பது அதாவது நன்மை மற்றும் ஆன்மீக இன்பத்தை முழுவதுமாக பெறுவதற்காக இறை வழியில் செலவு செய்யப்படும் அந்த செல்வமே பயனளிக்கின்றது என்பதே இங்கு மையக் கருத்து ஆகும். (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம், 210-211, பதிப்பு-1984)

மற்றவை இன்ஷா அல்லாஹ் எதிர் வரும் நாட்களில்..

தமிழாக்கம் : மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

**National Watch Company**

**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT 99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad